வார மலர்
மின்னிதழ்
# தேசியம்
THESIYAM දේසියම්
www.thesiyamnews.com

நீங்களும் செய்தியாளர் ஆகலாம்
செய்திகள், சம்பவங்கள், நிகழ்வுகளை எமக்கு அனுப்பி வையுங்கள்

thesiyamnews@gmail.com

குரல்: 01 | பங்குனி மாதம் 22.03.2023 புதன்கிழமை | பக்கங்கள்: 14



# பறிபோய்க் கொண்டிருக்கும் தமிழரின் அடையாளங்கள்

பக்கம் 02

## அச்சத்தில் தமிழ் மக்கள்

## தமிழ் தலைமைகளின் மௌனத்துக்கு காரணம் என்ன?

## அம்பாறை இளைஞர்களுக்கு எமனான எல்லே நீர்வீழ்ச்சி



அம்பாறை மாவட்டத்திலிருந்து நேற்று அதிகாலை வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்லேக்கு குளிக்கச் சென்ற 10 இளைஞர்களில் நால்வர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகாலையில் அம்பாறை மாவட்டம் கல்முனை, சாய்ந்தமருது மற்றும் சம்மாந்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 10 இளைஞர்களே இவ்வாறு குளிக்கச் சென்றுள்ளனர்.

இவர்களுள் (21-22) வயதிற்கும் இடைப்பட்ட 04 இளைஞர்கள் மரணமடைந்துள்ளனர்.

பக்கம் 02

## தமிழர் பகுதியில் அமர்த்தப்படும் புத்தர்

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்கள் மிக நீண்டகால யுத்தத்தை சந்தித்தவர்கள், அவர்களின் நிலங்கள் இன்றும் பறிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

பக்கம் 02

## 103 பாடசாலைகள் வடக்கில் மூடல்

வடக்கு மாகாணத்தில் போர் முடிவடைந்த பின்னரான 14 ஆண்டுகள் காலப் பகுதியில் மாணவர்கள் இல்லாமையால் 103 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

பக்கம் 02

## 2 மாதங்களில் 3,500 இராணுவத்தினர் தப்பியோட்டம்



பக்கம் 02

## வடக்கில் அமைக்கப்படும் விகாரைகளை அகற்றுங்கள்

### சபையில் கஜன் கர்ஜனை



நாவற்குழியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட பௌத்த விகாரை உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்றும் கைதடியில் அமைக்கப்பட்டு வரும் விகாரை, குருந்தூர்மலை விகாரை, கொக்குத்தொடுவாய், மாங்குளம் பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் விகாரைகளும் உடனடியாக அகற்றப்பட வேண்டும்

பக்கம் 02

## முல்லைத்தீவில் தமிழர்களின் பூர்வீக கிராமங்களில் பௌத்தமயமாக்கல் முயற்சிகள் முன்னெடுப்பு

பக்கம் 02

## மீண்டும் உயர்வடைந்தது ரூபாவின் பெறுமதி

சர்வதேச நாணய நிதியத்தின் அறிவிப்பையடுத்து நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி மீண்டும் உயர்வடைந்துள்ளது.

நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட பணவீக்க அதிகரிப்பினால் கடந்த காலங்களில் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துசென்றது.

இருப்பினும் கடந்த வாரம் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியில் சடுதியான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டதுடன், ரூபாவின் பெறுமதி தொடர்ந்து அதிகரித்துச்சென்றது.

ஆனால்,திங்கட்கிழமை மீண்டும் ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டது. அதன்படி அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான ரூபாவின் கொள்வனவுப் பெறுமதி 331.71 ரூபாவாகவும், விற்பனைப்பெறுமதி 349.87 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில் நீடிக்கப்பட்ட நிதியுதவிச்செயற்திட்டத்தின் கீழ் எதிர்வரும் 48 மாதகாலத்தில் இலங்கைக்கு 2.286 பில்லியன் டொலர் நிதியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர்சபை அனுமதியளித்திருப்பதாக நேற்று உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதையடுத்து மீண்டும் ரூபாவின் பெறுமதி உயர்வடைந்துள்ளது.

அதன்படி நேற்று செவ்வாய்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான ரூபாவின் கொள்வனவுப்பெறுமதி 316.84 ரூபாவாகவும், விற்பனைப்பெறுமதி 334.93 ரூபாவாகவும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2 மாதங்களில் 3,500 இராணுவத்தினர் தப்பியோட்டம்

இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் மாத்திரம் ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளைச் சேர்ந்த 25 அதிகாரிகள் உட்பட 3ஆயிரத்து 500 இற்கும் அதிகமானோர் சட்டவிரோதமான முறையில் இராணுவத்தை விட்டு வெளியேறியுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

பிரிகேடியர் உட்பட 13 அதிகாரிகள் தனிப்பட்ட பயணமாக வெளிநாடு சென்று இராணுவத்தை விட்டு வெளியேறியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதன்காரணமாக புதிய கடவுச்சீட்டுகளைத் தயாரிப்பதற்கும் கடவுச்சீட்டுகளைப் புதுப்பிப்பதற்கும் முப்படைகளின் தளபதிகளின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சு குடிவரவு திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

தற்போது நிலவும் பொருளாதார சிரமங்களால் கடனைச் செலுத்த முடியாத நிலை, அதிகாரிகள் மற்றும் ஏனைய பதவிகளுக்கு உள்ள வசதிகள் குறைப்பு போன்ற காரணங்களால் இராணுவத்தினர் வெளியேற ஆரம்பித்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

## வடக்கில் அமைக்கப்படும் விகாரைகளை அகற்றுங்கள்

என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் நேற்று சபையில் இடம்பெற்ற அமர்வில் வலியுறுத்தினார்.

அவர் மேலும் பேசுகையில் ,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வாதிகார ஆட்சி நோக்கிச் செல்கிறார்.வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர் தாயகத்தை அழிக்கும் வகையில் திட்டமிட்ட வகையில் சிங்கள குடியேற்றங்கள் உருவாக்கப்படுகின்றன.யாழ்ப்பாண மாவட்டத்தில் நாவற்குழியில் கூட்டுப்படைகளின் தளபதியான வேந்திர சில்வாவினால் பௌத்த விகாரை திறந்து வைக்கப்பட்டது.ஒரு சிங்களவர்கள் கூட வாழாத நாவற்குழி பகுதியில் ராஜபக்ஷர்களினால் சிங்கள குடியேற்றம் உருவாக்கப்பட்டது.புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான காணியில் சட்டவிரோதமான முறையில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு சவேந்திர சில்வாவினால் திறந்து வைக்கப்பட்டது.

சவேந்திர சில்வாவினால் திறந்து வைக்கப்பட்ட விகாரை அவ்விடத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும்.அத்துடன் கைதடியில் அமைக்கப்பட்டு வரும் விகாரை, குருந்தூர்மலை விகாரை, கொக்குத்தொடுவாய்,மாங்குளம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் விகாரைகள் அகற்றப்பட வேண்டும்.

நாங்கள் பௌத்தத்திற்கும்,சிங்களவர்களுக்கும் எதிரானவர்கள் அல்ல,நயினாதீவு,கிளிநொச்சியில் உள்ள பௌத்த விகாரைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை,விடுதலைப் புலிகள் அமைப்புக் காலத்தில் கூட இந்த விகாரைகள் இருந்தன,போராளிகளினால் எவ்வித பாதிப்பும் பௌத்த விகாரைகளுக்கு ஏற்படுத்தப்படவில்லை.ஆனால் யுத்தத்தின் பின்னர் தமிழரின் தாயகம் இராணுவத்தின் துணை ஊடாக திட்டமிட்டு அழிக்கப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

## பறிபோய்க் கொண்டிருக்கும்...

தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடமான வடக்கு-கிழக்கு பகுதியில் தமிழ் மக்களின் கலாசார மரவுரிமைகளை அழித்தும் அவற்றை திரிவுபடுத்தியும் பௌத்த மயமாக்கல் என்னும் வேலைத்திட்டம் மும்முரமாக இடம்பெற்றுவருகிறது.ஆனால், இவற்றுக்கு எதிராக தமிழர் தரப்பு தொடர்ந்தும் மௌனம் காத்துவருவது தமிழ் மக்கள் மத்தியில் கவலையையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

தொல்பொருள் திணைக்களம் தமிழரின் சைவ ஆலயங்கள் மீது கைவைக்கும் அதேவேளை,ஒருசில தரப்புகள் தமிழரின் நிலங்களை கையகப்படுத்தும் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுவருகிறது.சிங்கள மக்கள் வாழாத பிரதேசத்தில் நாவற்குழியில் விகாரை,வெடுக்குநாரி மலை, குருந்தூர்மலை, உருத்திரபுரம் சிவன் கோவில், நிலாவரை நல்ல தண்ணி கிணறு போன்ற இடங்களை பௌத்தமயமாக்கல் மற்றும் நெடுந்தீவு பகுதியிலுள்ள புராதன முக்கியத்துவம் வாய்ந்த வெடியரசன் கோட்டையானது புராதன பௌத்த முக்கியத்துவம் வாய்ந்த இடிபாடுகளைக் கொண்ட பகுதியென அடையாளப்படுத்தி, அறிவித்தல் பலகை வைக்கப்பட்டுள்ள சம்பவம் என சில வாரங்களுக்குள் பல அத்துமீறல்கள் நடைபெற்றுள்ளன. ஆனால்,இந்தவிவகாரங்கள் தொடர்பில் தமிழர்களின் தலைமைகள் என கூறிக்கொள்வோர் இந்த விவகாரங்கள் தொடர்பில் தொடர்ந்தும் மௌனம் காத்துவருகிறார்கள்.

இதனை தொடர விடுவது ஆபத்தானது என சமூக ஆர்வலர்களும் தமிழ் மக்களும் கடும் ஆவேசத்துடன் தெரிவிக்கின்றனர்.எனவே உடனடியாக இதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தமிழ் தலைமைகள் முன்வரவேண்டுமெனவும் தமிழரின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும் தென்னிலங்கையின் செயற்பாடுகளை சர்வதேசத்தின் கவனத்துக்கு கொண்டு செய்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் முன்வரவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்சமயம் தமிழர் தேசத்தில் நடைபெறும் சம்பவங்கள் இன அழிப்புடன் பின்னிப்பிணைந்த செயற்பாடுகளாகும்.தனியான மொழி,கலாசார பண்பாடுகளை கொண்ட தமிழர்களின் வாழ்வியல் வரலாற்றை அழிப்பதனூடாக அவர்களின் தனித்துவம்,அடையாளத்தை அழித்து நாடு முழுவதையும் சிங்கள தேசமாக மாற்றும் ஒரு ஏற்பாடே தற்சமயம் இடம்பெறுவதாகவும் இதற்கு தமிழர் தேசம் சோர்ந்து போய்விடாது தைரியமாக எதிர்கொள்ளவேண்டுமெனவும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றை முழுமையாக தடுத்து நிறுத்தி தமிழர் தாயகத்தையும் தமிழ் மக்களின் தொன்மையையும் தனித்துவத்தையும் பாதுகாக்க வேண்டியது காலத்தின் அவசியமாகும்.அதற்கான வேலைகளை சம்பந்தப்பட்ட தரப்புகள் மேற்கொள்ளவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முல்லைத்தீவில் தமிழர்களின் பூர்வீக

முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் சத்தமில்லாமல் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மணலாற்றின் கற்தூண், அக்கரைவெளி, வண்ணாமடு, மணற்கேணி ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு சத்தமில்லாமல் பௌத்தமயமாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அப்பகுதித் தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இது தொடர்பில் அப்பகுதி தமிழ் மக்கள் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து, அவர் குறித்த பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டிருந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தமிழர்களின் பூர்வீக மணலாற்றின் கற்தூண் பகுதியை மகாப்பிட்டிய என்னும் பெயரிலும், வண்ணாமடு பகுதியை வண்ணாமடுவ என்னும் பெயரிலும், அக்கரைவெளி பகுதியை அக்கரவெலிய என்னும் பெயரிலும் பௌத்த பிரதேசமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், அதேபோல் மணற்கேணிப் பகுதியையும் அவ்வாறே பௌத்த பிரதேசமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அப்பகுதித் தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கடந்த 1984ஆம் ஆண்டு தமிழ்மக்கள் குறித்த பகுதிகளிலிருந்து இடம்பெயர்வதற்கு முன்பு கற்தூண்பகுதியில் வைரவர் ஆலயம் இருந்ததாகவும், அக்கரைவெளியில் முனியப்பர் ஆலயமொன்று இருந்ததாகவும், அவ்வாறு இருந்த கோவில்களை உடைத்தழித்து தற்போது அந்த இடங்களை பௌத்த பகுதிகளாக மாற்றுவதற்கு முயற்சிகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோல் மணற்கேணிப் பகுதியில் இருந்த சைவ வழிபாட்டு அடையாளங்கள் உடைக்கப்பட்டு அங்கும் பௌத்த மயமாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அப்பகுதித் தமிழ்மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை அக்கரைவெளியில் 1984ஆம் ஆண்டிற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருந்ததாகவும், மாட்டுப்பண்ணைகள், விவசாய நிலங்கள் என தமிழ் மக்கள் சிறப்பாக வாழ்ந்த இடங்களையே பௌத்தமயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருதாகவும் தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் தற்போது அக்கரைவெளிப் பகுதியில் கொக்கிளாய் பகுதியிலுள்ள தமிழ் மக்களும், கற்தூண் பகுதியில் கொக்குத்தொடுவாய் பகுதித் தமிழ் மக்களும், மணற்கேணி மற்றும், வண்ணாமடுப் பகுதிகளில் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணித் தமிழ் மக்களும் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இந்நிலையில் அண்மைக்காலமாக அந்தப் பகுதிகளுக்கு பௌத்த தேரர்கள் உள்ளிட்ட குழுவினர் அதிகளவில் வந்து செல்வதாகவும், பௌத்த மயமாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தமிழ்மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தவகையில் கற்தூண்ப் பகுதிக்கு முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனை அழைத்துச் சென்ற தமிழ் மக்கள் அங்கு முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளைக் காண்பித்தனர்.

குறித்த பகுதிகளிலிருந்து தம்மை அப்புறப்படுத்தவே இவ்வாறான பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அப்பகுதித் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு ஏற்கனவே தமிழர்களின் பூர்வீக மணலாற்றுப்பகுதியின் பிரதான இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வெலிஓயாவாக மாற்றப்பட்டுள்ளதுடன், தமது நீர்ப்பாசனக்குளங்களும் அதன்கீழான வயல் நிலங்களும் அபகரிக்கப்பட்டதைப்போன்று, அவற்றை அண்டிய மானாவாரி விவசாய நிலங்களையும் ஆக்கிரமிப்பதற்கான அபாயம் இந்த பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் மூலம் ஏற்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## தமிழர் பகுதியில் அமர்த்தப்படும் புத்தர்

அவர் மேலும் தெரிவிக்கையில், நெடுந்தீவில் உள்ள வெடியரசன் கோட்டையை புத்த விகாரை என பறிக்க முயற்சிக்கின்றார்கள்.

இந்நிலையில் நாவற்குழியில் சிங்கள மக்கள் ஒருவரைகூட காண கிடைக்காது.ஆனால் தற்போது அங்கு ஒரு விகாரையை அமைத்து கடந்த வாரம் சவேந்திர சில்வா வருகை தந்து கோபுரம் வைக்கின்றார்.

அதேவேளை மயிலிட்டி பகுதியில் தனியாருக்கு சொந்தமான நிலங்களை அபகரித்து விகாரைகளை அமைக்கின்றனர்.

தமிழருடைய பகுதிகளான வெடுக்குநாரி மலை, குருந்தூர்மலை, உருத்திரபுரம் சிவன் கோவில், நிலாவரை நல்ல தண்ணி கிணறு போன்ற இடங்களில் வலுக்கட்டாயமாக புத்தர் சென்று அமருகின்றார்.

அந்த நிலங்கள் பறிக்கப்படுகின்றது. தொல்லியல் திணைக்களத்தினூடாக மிகப்பெரிய ஆக்கிரமிப்பு நடைபெறுகின்றது என குற்றம் சாட்டியுள்ளார்.

## அம்பாறை இளைஞர்களுக்கு

இவர்களில் கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும், சம்மாந்துறை மற்றும் சாய்ந்தமருதைச் சேர்ந்த இருவருமே இவ்வாறு மரணமடைந்துள்ளனர். இம்மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 103 பாடசாலைகள் வடக்கில் மூடல்....

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 49 பாடசாலைகளும், கிளிநொச்சியில் 8 பாடசாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 10 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பாடசாலைகளும், வவுனியா மாவட்டத்தில் 34 பாடசாலைகளுமே இவ்வாறு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கில் எந்தவொரு பாடசாலையும் நிரந்தரமாக மூடப்படவில்லை. வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கூறிய 103 பாடசாலைகளும் தற்காலிகமாகவே மூடப்பட்டுள்ளன.

மாணவர் பற்றாக்குறை காரணமாகவே இவை மூடப்பட்டுள்ளன. இதற்கு இடப்பெயர்வுகள், நகர்புற பாடசாலைகளின் வளர்ச்சி, நகரமயமாக்கல், சனத்தொகைப் பற்றாக்குறை எனப் பல காரணங்கள் காணப்படுகின்றன.

எந்தவொரு பாடசாலையும் நிரந்தரமாக மூடப்படவில்லை. மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பால் இன்று சில பாடசாலைகளில் புதிதாகக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. மறுபுறம் சில பாடசாலைகள் மூடப்படுகின்றன. நகர்ப்புற பாடசாலைகளின் வளர்ச்சியும் இதற்குக் காரணம். பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு சில இடங்களில் மக்கள் இல்லை.

சில இடங்களில் நகரமயமாக்கல் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றது. இது குறித்து நாம் அவதானம் செலுத்துகின்றோம். முறைப்படியான விழிப்புணர்வு நடவடிக்கைகளை எமது தரப்பில் நாமும் முன்னெடுப்பதற்குத் தயாராக உள்ளோம்.

தற்காலிகமாகப் பாடசாலைகளை மூடுவது எமது விருப்பு அல்ல. போதிய எண்ணிக்கையான மாணவர்கள் வருகை தருவார்களாயின் நிச்சயமாக பாடசாலைகள் மீள ஆரம்பமாகும் என்றார்.

தேசியம் THESIYAM
www.thesiyamnews.com
ஆசிரியர் பீடம்

இல.527, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

# பறிபோகும் தமிழர் அடையாளமும் காத்திருக்கும் பேராபத்தும்

பண்டைப் பெரும்புகழ் உடையோமா? இல்லையா? பாருக்கு வீரத்தை சொன்னோமா? இல்லையா? எண்டிசை வாய்மையால் ஆண்டோமா இல்லையா?என்று தமிழர் பெருமையை உலகறிய சொன்ன பாவேந்தர் பாரதிதாசனின் வரிகள் தமிழர்களின் தொன்மையான பண்பாட்டையும் கலாசாரங்களையும் எடுத்து காட்டுகிறது. அதேபோல்,இலங்கைத்தீவின் வரலாற்றில் நீண்டகால வரலாற்றை கொண்டவர்கள் ஈழத்தமிழர்கள் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. அதனை மறுப்பதற்கு வரலாற்று பதிவுகள் எதுவும் இல்லை என்பதே யதார்த்தம்–உண்மை.அப்படிப்பட்ட வரலாற்றை கொண்ட இனத்தையும் அவர்களுடைய அடையாளங்களையும் அழித்தொழிக்கவேண்டுமென்பதில் சிங்கள தீவிரவாதம் முன்னரைவிட இன்று அதிகளவில் அக்கறையுடனும் தீவிரமாகவும் செயற்பட்டுவருகிறது.

ஒரு இனத்தை அழிப்பதற்கு அல்லது ஒரு இனத்தின் தேசத்தை அழிப்பதற்கு, அந்த இனத்தின் சமய,கலாசார,பண்பாட்டு அடையாளங்களை அழித்துவிடுவதே முதற்படியாகும்.இவை அழிக்கப்பட்டுவிட்டால் அந்த இனம் அந்த மண்ணில் வாழ்வதே கேள்விக்குரியாவதோடு,அவர்களுடைய இருப்பையும் வராலாற்றையும் இல்லாமலாக்குவதற்கும் எதிர்கால சந்ததியை மிரட்டி அடிமைப்படுத்தி வைப்பதற்கும் இந்த யுக்தி மிகவும் பொருத்தமான ஒரு தெரிவாகும்.இதனை சிங்கள தேசம் இன்று நன்கு புரிந்துகொண்டு அதற்கான வேலைத்திட்டத்தை தமிழர் தேசத்தில் மும்முரமாக நடத்திக்கொண்டிருக்கிறது.

ஆனால்,தமிழ் சமூகம் இதனுடைய ஆபத்தை அறியாமல் மௌனமாக இருக்கிறது.70 வருடகாலமாக தமிழ் இனம் எதற்காக போராடியதோ,எதனை காப்பதற்காக இலட்சக்கணக்கான உயிர்களை பறிகொடுத்ததோ இன்று அவை அனைத்தும் மிக இலகுவாக பறிபோய் கொண்டிருக்கின்றன. சிங்கள தேசம் 75 ஆண்டுகளுக்கு முன்னர் கண்ட கனவு பலித்துவிடுமோ என்ற அச்சம் கூட இன்று நடக்கின்ற சம்பவங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆனால்,தமிழ் மக்களின் தலைமைகள் என்று கூறிக்கொள்பவர்கள் இதன் ஆபத்தை அறிந்தும் மௌனமாக இருப்பதுடன், மக்களையும் மௌனிகளாக்கி வைத்திருக்கிறார்கள்.

தமிழர் தேசத்தில் இன்று இடம்பெறுகின்ற பௌத்த–சிங்கள ஆக்கிரமிப்புக்கும் தமிழரின் அடையாளங்களை பௌத்த சின்னங்களாக மாற்றும் திட்டத்துக்கும் நில ஆக்கிரமிப்புகளுக்கும் பிரதான காரணமே தமிழ் தலைமைகளிடம் காணப்பட்ட இராஜதந்திரமற்ற அரசியலும் தமிழருடைய இருப்பு எதிர்காலம் தொடர்பில் எந்த திட்டங்களையும் வகுக்காமல் இருந்ததுமே ஆகும். இதற்கு தமிழ் தலைமைகள் மாத்திரமல்ல,தமிழர் தேசத்தில் இருக்கின்ற புத்திஜீவிகள்,கல்விமான்கள்,புலம்பெயர் தேசத்தில் வாழ்கின்றவர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்ட அனைவரும் பொறுப்பேற்கவேண்டும். காரணம்,யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் அரசியல் தீர்வு–பொறுப்புக்கூறல் என்று கூறி ஒரு வட்டத்துக்குள்ளேயே தமிழரின் அரசியலை புகுத்தி அதற்கு பின்னாலேயே ஈழத்தமிழர்களையும் புலம்பெயர் தமிழர்களையும் ஓடவைத்த தமிழ் தலைமைகள் சிங்கள தேசத்தின் நிகழ்ச்சி நிரல் தொடர்பிலோ அல்லது சிங்களவர்களால் தமிழருக்கும் தமிழ் மண்ணுக்கும் எதிராக நிகழ்த்தப்படவிருக்கும் இவ்வாறான அச்சுறுத்தல்கள் தொடர்பில் தமிழ் தேசத்தை விழிப்படையாமல் வைத்திருந்தமை மிகப்பெரும் தவறாகும்.அதேபோல், கல்விமான்கள், புத்திஜீவிகளும் மௌனமாக இருந்துகொண்டு அனைத்தையும் அரசியல்வாதிகளிடம் விட்டுவைத்ததும் பெரும் தவறு.

ஆகவே இனியும் தமிழ் மக்கள் மௌனம் காப்பது பொருத்தமாகாது. அதேபோல்,புத்திஜீவிகள்,கல்விமான்கள்,சமூக அக்கறையுடையோர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக பின்னிற்பது காலத்துக்கு பொருத்தமாக இருக்கமுடியாது.தமிழ் தலைமைகள் என்போர் வாய்கிழிய பேசுவதற்கே பொருத்தமானவர்கள்,அவர்களுடைய நோக்கம் முழுவது தேர்தல் அரசியலில் மாத்திரமே இருக்கிறது.ஆகவே தமிழ் மக்களின் சமய,கலாசார பண்பாட்டு அடையாளங்களையும் தமிழரின் மண்ணையும் பாதுகாத்துக்கொள்வதற்கு அரசியலுக்கு அப்பால் ஒரு வலுவான சக்தி உருவாவது அவசியமாகும்.அந்த சக்தி என்பது வசதிபடைத்த புலம்பெயர் சமூகத்துடனும் இணைந்து அழிவடைந்து காணப்படும் எமது அடையாளங்ளுக்கு புத்துயிர் கொடுக்கும் சக்தியாகவும் எமது அடையாளங்களை பாதுகாத்து அவற்றுக்கு எதிராக வரும் எதிர்ப்புகளுக்கு எதிராக தமிழ் மக்களை ஒன்றிணைத்து போராடக்கூடிய ஒரு சக்தியாகவும் உருவாவதே காலத்தின் அவசிய தேவையாகும்.

# நல்லூர் மந்திரிமனை தொடர்பில் ஏற்பட்டுள்ள குழப்பம்!



## பேராசிரியர் புஷ்பரட்ணம் வெளியிட்டுள்ள தகவல்

சங்கிலியன் தோரண வாயில் வேலைகள் இரண்டு வார கால பகுதிக்குள் முடிவடைந்து விடும். அதன் பின்னர் மந்திரி மனை மீள் உருவாக்க செயற்பாடுகளை ஆரம்பிக்க உள்ளோம். அதற்கான நிதியுதவிகளை மக்களிடம் கோருகிறோம் என தொல்லியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் பரமு.புஷ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் ஆலயத்திற்கு அருகில் உள்ள மந்திரிமனை வளாகத்தினுள் உள்நுழைய தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு விளக்கம் கொடுக்கும் முகமாகவே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

2010 ஆம் ஆண்டு பிராந்திய தொல்லியல் திணைக்களம் ஒன்று உருவாக்கப்பட்டது. குறித்த திணைக்களத்தின் ஆலோசகராக பதவியாற்றி இருக்கின்றேன். அதனால் குறித்த விடயம் தொடர்பில் நான் சில கருத்துக்களை கூறலாம் என நினைக்கிறேன்.

யாழ்ப்பாணத்தில் 86 இடங்கள் மரவுரிமை இடங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அதில் முதலாவதாக மந்திரிமனை, சங்கிலியன் தோரண வாசல், ஜமுனா ஏரி மற்றும் சங்கிலியன் அரண்மனை ஆகிய இடங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு அவற்றுக்கான பெயர்ப் பலகையும் அங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அவை வர்த்தகமானிலும் வெளியிடப்பட்டுள்ளன. தொல்லியல் திணைக்களம் மரவுரிமை இடங்களாக அடையாளப்படுத்தி அதனை வர்த்தகமானியில் பிரசுரம் செய்தால் நில உரிமையாளர் அங்கு புதிதாக எதையும் மாற்றி அமைக்க முடியாது.

அதே சமயத்தில் தொல்லியல் திணைக்களமும் நில உரிமையாளரின் அனுமதியின்றி எந்த நடவடிக்கையினையும் மேற்கொள்ளாது. இதனால்தான் மந்திரிமனை உரிய காலத்தில் பேணப்படாமைக்கான காரணமாகும்.

அதே சமயம் தொல்லியல் திணைக்களம் மந்திரி மனை தொடர்பாக மிகுந்த அக்கறையுடன் நில உரிமையாளருடன் பேரம்பேசி அந்த நிலத்தைப் பெற்று அதனை சீர் செய்யும் வசதிகளும் நிலமைகளும் தற்போது தொல்லியல் திணைக்களத்திடம் இல்லை.

அதனால் தான் நாம் யாழ்ப்பாணத்தில் மரவுரிமை மையம் ஒன்றினை உருவாக்கி அதன் முதல் பணியாக சங்கிலியன் தோரண வாசலை மீள் உருவாக்கம் செய்து அது முடிவுறும் நிலையில் இருக்கின்றது.

இரண்டு வாரத்தில் அது முடிவடையும் அதை செய்வதற்கு எங்களுடைய மருத்துவபீட பேராசிரியர் மருத்துவர் ரவிராஜ் அவர்கள் 2.2 மில்லியன் ரூபாவினை அதாவது அதற்குரிய செலவு முழுவதையும் ஏற்றுக் கொண்டார்.

மந்திரி மனையை மீள் உருவாக்கம் செய்கின்ற முயற்சியில் ஈடுபட்ட போது அதனுடைய உரிமையாளர் எங்களோடு தொடர்பு கொண்டு சில நிபந்தனைகளை விதித்தார். தன்னுடைய நிலங்கள் அபகரிக்கப்பட்டு தனியாரால் சில கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன எனவும், அவற்றை சட்டநாதர் கோவிலுக்குப் பெற்றுத்தருவதற்கு உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

நாங்களும் முயற்சி செய்தோம் அது முழுமையாக வெற்றி அளிக்கவில்லை. பின்னர் நாங்கள் அந்த நிலத்தை விலை கொடுத்து வாங்குவதற்கு முயற்சி எடுத்தோம். அதனை அவர் தவணை முறையில் பணம் செலுத்தி பெறுவதற்கு ஒப்புக்கொண்டு பல மாதங்கள் பேசியதன் பின்னர் இப்பொழுது எங்களுக்கு அதற்கான ஒப்புதலைத் தந்திருக்கின்றார். நாங்கள் தற்போது அதற்குரிய பணத்தை அவருக்குக் கொடுத்து மீள் உருவாக்க பணியை முன்னெடுத்துள்ளோம் சில ஆரம்பப் பணிகள் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கின்றன.

அவ்வாறு செய்து கொண்டிருக்கும் பொழுதுதான் நில உரிமையாளர் ஒப்பந்த முடியும் வரை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

இதனால்தான் அந்த இடத்தினை தொல்லியல் திணைக்களம் தனியாக மீள் உருவாக்கம் செய்ய முடியாது. அதே நேரத்தில் நில உரிமையாளரும் வர்த்தகமானியில் வெளியிடப்பட்ட மரவுரிமைச்சின்னத்தை தான் விரும்பியவாறு எந்த மாற்றத்தினையும் மேற்கொள்ள முடியாது.

இப்பொழுது நில உரிமையாளர் எங்களுக்கு நிலத்தைத் தருவதற்கு முழுமையான ஒப்புதல் அளித்திருக்கின்றார்.

நாங்கள் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் மீள் உருவாக்கம் செய்வதற்கான திட்டங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டு அவை தொல்லியல் திணைக்களத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

எனவே சங்கிலியன் தோரண வாசல் வேலைகள் பூர்த்தி அடைந்ததன் பின்னர் மந்திரி மனையின்பணிகள் ஆரம்பிக்கப்படும். அதனை மேற்கொள்வதற்கு இன்று மக்கள் மத்தியில் அதிருப்தி நிலையத்தில் இருக்கிறவர்களும் பெரும் பங்களிப்புச் செய்ய வேண்டும் ஐந்து பேர் நினைத்த உடனே இதை செய்து கொள்ள முடியாது.

பல மில்லியன் கணக்கான பணம் அவற்றை மீள உருவாக்குவதற்கு எங்களுக்கு தேவை. நாங்கள் அந்த பணியை தொடங்குகின்ற பொழுது ஊடகங்கள் ஊடாகவும் அதிருப்தி நிலையில் உள்ள மக்களிடமும் அவற்றை மீள் உருவாக்கம் செய்வதற்கு நிதி உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுப்போம்.

அவ்வாறு செய்கின்ற பொழுது அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்ய முடியும் என்பது தான் உண்மையான நிலைப்பாடு என்றார்.

# யாழ். சிங்கள மகா வித்தியாலய காணி இராணுவத்தினருக்கு வழங்கப்படுகிறதா?

யாழ் சிங்கள மகா வித்தியாலய காணியை இராணுவத்தினருக்கு நிரந்தரமாக வழங்குவதற்கு கல்வி அமைச்சோ, மாகாணத் திணைக்களங்களோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் சிங்கள மகா வித்தியாலய காணியை 95 ஆம் ஆண்டிலிருந்து இராணுவத்தினர் பயன்படுத்தி வருகிறார்கள்.

அந்தக் காணியை அவர்களுக்கு வழங்குவது தொடர்பான கோரிக்கை கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டிருந்தது.



அந்தக் காணியை நிரந்தரமாக வழங்குவதற்கு கல்வி அமைச்சோ, மாகாணத் திணைக்களங்களோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வழங்கப்பட்டதென்று வந்த செய்தி பிழையானது.

மேலும், பல ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக கஷ்டப் பிரதேசத்தில் பணியாற்றுகிறார்கள். அதனை நிவர்த்தி செய்ய வட மாகாணத்திற்கென இடமாற்று கொள்கை தயாரிக்கப்பட்டு இறுதி நிலையில் இருக்கிறது.

மாணவர்கள் மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்கள் தங்களுடைய விடயங்களை அதிகாரிகளோடு கலந்துரையாட சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே பொதுவெளியில் மாணவர்கள் தங்களுடைய விடையங்களை கலந்துரையாடுகிற வாய்ப்பு வெளிநாடுகளில் காணப்படுகிறது.

இது ஆசிரியர்கள் தொடர்பான குறைகளை கூறுவதற்கு என்று தப்பாக நினைத்து விடக்கூடாது. என்றார்.

# ஐ.பி.எல் போட்டியில் வியாஸ்காந்த்



யாழ்ப்பாணத்தை சேர்ந்த விஜயகாந்த் வியாஸ்காந்த் நடைபெறவுள்ள ஐ.பி.எல். போட்டியில் ராஜஸ்தான் றோயல் அணியின் வலைபயிற்சியின் போது பந்து வீச்சாளராக தெரிவாகி ராஜஸ்தான் புறப்படவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வியாஸ்காந்த் இந்த விடயத்தை தெரியப்படுத்தியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பங்களாதேஷில் விளையாடியது எனக்கு நிறைய அனுபவங்களும் சர்வதேச விளையாட்டு வீரர்களின் அறிமுகங்களும் கிடைக்கப்பெற்றது.

தற்போது ஐகஂ° இல் ராஜஸ்தான் அணியின் சுழல் பந்து வீச்சாளராக எனக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. என்னுடன் குமார் சங்கக்கார கதைத்திருந்தார். எனது கிரிக்கெட்டை அடுத்து கட்டத்திற்கு எடுத்து செல்ல கவனிக்கின்றேன் என்றார்.

அது தொடர்பில் சிலருடன் கதைத்து எனக்கான வாய்ப்புக்களை பெற்று தந்துள்ளார். அவருக்கு எனது நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன். எனக்கு கிடைத்துள்ள வாய்ப்புகளை நான் முடிந்தளவு பயன்படுத்தி என்னை வளர்த்துக்கொள்வேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஜூன் மாதம் தொடக்கம் யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் அக்கடமி ஆரம்பிக்கப்பட்டு , கிரிக்கெட் வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக ஒரு கிரிக்கெட் அக்கடமியின் இயக்குனர்களில் ஒருவரான வைத்தியர் க.சிறிதரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கிரிக்கெட்டை உயர்த்த உதவி செய்கிறோம். தரமான வீரர்களை உருவாக்கி, சர்வதேச தரத்தில் வீரர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன், யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக அக்கடமி உருவாக்கப்பட்டுள்ளது.

அதனூடாக வீரர்களுக்கு உயர்தர பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அத்துடன் கொழும்புக்கு வீரர்களை அழைத்து சென்று புற்தரைகளில் விளையாட வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்கவும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம்.

தேசிய சர்வதேச வீரர்களுடன் விளையாடும் அவர்களின் அனுபவங்களை பெற்று கொள்ளும் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தி கொடுப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

# யாழ். உடுவிலில் மதமாற்றிகள்

மதமாற்ற சபை ஒன்று யாழ். உடுவிலில் விளையாட்டு திடலில் மதமாற்ற முயற்சிக்கான கூட்டம் ஒன்றினை நடத்துவதற்கு அனுமதி கேட்பதாக மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடக அறிக்கையில் தகவல் வெளியிட்டுள்ளார். ஊடக அறிக்கையில் மேலும், முதல்வர் சைவப் புலவர் பரமேசுவரன், கிறிஸ்தவ மதமாற்ற சபையினருக்கு சைவப் பாடசாலைக்குள் மதமாற்றும் முயற்சிக்கான கூட்டம் நடத்த உரிமம் கொடுத்துள்ளார். இது குறித்து சிவ சேனைக்குச் செய்தி கிடைத்துள்ளது.

அதனைத் தொடர்ந்து சிவசேனைத் தொண்டர்கள் அங்கு சென்று வித்தியாசாலையைச் சுற்றிச் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

இது குறித்து, சிவன் கோயிலாருடன் சிவசேனை அமைப்பினர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறையிட்டுள்ளனர்.

# மன்னாரில் போராட்டம் நடத்த அழைப்பு

வடக்கு கடல் பகுதியில் வரி அறவீடு செய்து இந்திய மீனவர்களுக்கு வாரத்தில் மூன்று நாட்களுக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பாகவும், இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கை கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவதை கண்டித்தும் வடக்கு மாகாண மீனவர்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 23ம் திகதி வியாழக்கிழமை காலை மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்க உள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னாரில் ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாச செயலாளர் என்.எம்.ஆலம், மன்னார் மாவட்ட கிராமிய சம்மேளனத் தலைவர் ஜஸ்ரின் சொய்சா, மீனவ சமூகம் சார்பாக அன்ரனி சங்கர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

## முல்லைத்தீவில் தமிழர்களின்
# காணிகளில் எல்லைக்கற்கள் நடும் அரச அதிகாரிகள்
## அச்சத்தில் தமிழர்கள்

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக வயல் நிலங்களில் எவ்வித முன்னறிவிப்புமின்றி அரசதிணைக்களத்தைச் சார்ந்த சிலரால் எல்லைக் கற்கள் நாட்டப்பட்டு அபகரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை கொக்குத்தொடுவாய் கமக்கார அமைப்பினர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

அத்துடன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனை அழைத்து அங்குள்ள நிலைமைகளைக் காண்பித்துள்ளனர்.

கொக்குத்தொடுவாய் - கோட்டக்கேணியிலிருந்து, அம்பட்டன் வாய்க்கால், தீமுந்தல், பணம்போட்ட கேணி, நாயடிச்ச முறிப்பு, வெள்ளைக்கல்லடி, சிவந்தா முறிப்பு, சூரியனாறுவரையான தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக வயல் நிலங்களில் அரச திணைக்களத்தைச் சார்ந்த சிலரால் எல்லைக்கற்கள் நாட்டப்பட்டு அபகரிப்பு முயற்சியொன்று முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

அதேவேளை காணிகளுக்குரிய தமிழ் மக்களுக்கோ, கமக்கார அமைப்பினருக்கோ அறிவித்தல் வழங்கப்படாமலேயே குறித்த எல்லைக் கற்கள் நாட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக மக்களுக்கு அறிவித்தல் வழங்காமல் எல்லைக் கல் நாட்டும் செயற்பாடொன்று, ஏற்கனவே கடந்தவருட இறுதிப் பகுதியிலும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அப்போது இது தொடர்பில் உரிய அரச அதிகாரிகள் மற்றும், மணலாறு பகுதி நில அளவைத் திணைக்களத்தினரோடு பேசி வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் மற்றும், அப்பகுதித் தமிழ் மக்கள் அங்கு நாட்டப்



பட்ட எல்லைக்கற்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

அத்துடன், இனிமேல் இவ்வாறான எல்லைக்கல் நாட்டும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவிருந்தால் காணிகளுக்குரிய மக்களுக்கு, கமக்கார அமைப்பினருக்கு, மாவட்டசெயலர் மற்றும், பிரதேசசெயலர் ஆகியோருக்கு அறிவித்தல் வழங்கியே எல்லைக்கல் நாட்டப்படுமென, எல்லைக்கல் நாட்டும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்திருந்தனர். எனினும் தற்போது மீண்டும் எவ்வித முன்னறிவிப்புமின்றி தமிழ்மக்களுக்குரிய வயல் காணிகளில் எல்லைக்கற்கள் நாட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் அப்பகுதி மக்களின் அழைப்பினை ஏற்று குறித்த பகுதிகளுக்கு நேரடியாகச் சென்ற வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், இது தொடர்பில் உரியவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவதாகவும் தெரிவித்திருந்தார்.

மேலும் குறித்த செயற்பாடு தொடர்பில் மாவட்டசெயலர் மற்றும், பிரதேசசெயலர் ஆகியோரது கவனத்திற்கும் கொண்டுவரவுள்ளதாகவும் கொக்குத்தொடுவாய் பகுதி தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்பு பூநொச்சிமுனை பாலம் திருத்தப்படாமையால் மக்கள் அவதி!



மட்டக்களப்பு பூநொச்சிமுனை பாலம் திருத்தப்படாமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த உள் வீதியினூடாக சுமார் 5000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இலகுவாக பஸ் வண்டியில் செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருந்த பாதையாகவும் இது கருதப்படுகிறது.

இது தவிர இப்பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் இலகுவாக நகர பாடசாலைகளுக்கு செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப் பாதை முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளதனால் தமது கருமங்களை முடித்துக் கொள்வதற்காக அதிக பணம் செலவு செய்து நீண்ட பாதை ஊடாக பயணிக்க வேண்டி இருப்பதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி வறிய மக்களின் பிரதான பாதையாக கருதப்படுகின்ற இப்பாதையின் இப் பாலத்தை திருத்தம் செய்து தருவதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர் .

இப்பாலம் இடிந்து நொறுங்கி சுமார் இரண்டு வருட காலத்தை கடந்து இருக்கின்ற போதிலும் இப்பிரதேசத்திற்கு வருகை தந்த அரசியல்வாதிகளோ அரசியல் அதிகாரம் படைத்தவர்கள் எவரும் இதனை திருத்த கவனம் செலுத்தவில்லை என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாலத்தின் திருத்த வேலை பிரதேச மக்களுக்கு அத்தியாவசிய தேவையாக கருதப்படுவதனால் விரைவாக இந்தப் பாலத்தை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராத யகம்பத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண காணிப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வு



கிழக்கு மாகாண காணி பிரச்சினை மற்றும் தேசிய காணி கொள்கை தொடர்பில், மக்கள் காணி ஆணைக்குழுவின் அறிக்கையை சிபாரிசு செய்வதற்கு கிழக்கு மாகாண மட்டத்தில் உள்ள பல்லின அரசியல் பிரதிநிதிகளுக்கான செயலமர்வு அம்பாறை மாவட்டம் நிந்தவூரில் நடைபெற்றது.

செயலமர்வினை காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி மற்றும் மனித எழுச்சி நிறுவனம் இணைந்து ஏற்பாடு செய்திருந்ததுடன் காணி தொடர்பிலான பல்வேறு விளக்கவுரைகள் வளவாளர்களால் வழங்கப்பட்டு, கருத்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

செயலமர்வின் ஆரம்பத்தில் பங்கேற்பாளர்கள் பதிவு இடம்பெற்றதுடன் அம்பாறை மாவட்ட காணி பிரச்சினை தொடர்பில் வரப்புயர என்ற பெயரில் காணொளி ஒன்று காண்பிக்கப்பட்டது.

காணி உரிமைக்கான மக்கள் கூட்டணியின் மக்கள் நில ஆணையக் குழு தயாரித்த கொள்கைப் பரிந்துரையின் அறிமுகம் குறித்து மக்களின் காணி ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் சந்துன் துடுகல கருத்துரைகளை முன்வைத்தார்.

மக்களின் காணிக் கொள்கையின் பரிந்துரையை எவ்வாறு முன்வைத்தல் என்பது தொடர்பில், மக்கள் காணி ஆணைக்குழு ஆணையாளர்களான சட்டத்தரணி ஏர்மீசா டீக்கல மற்றும் தோட்ட மக்களின் உரிமை தொடர்பான சமூக செயற்பாட்டாளர் கணேசலிங்கம் கணேஸ் விரிவாக விளக்கவுரைகளை வழங்கினர்.

இச்செயலமர்வில் பல்லின அரசியல் பிரதிநிதிகளுடன் கருத்துக்கள் மக்களின் காணிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கண்டறியவும் கிழக்கு மாகாணத்தில் காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் காணி கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் ஒத்துழைப்பதற்கான வாய்ப்புகளை அடையாளம் காணுதல் என்பனவும் இடம்பெற்றன.

# புலஸ்தினி நாட்டிலிருந்து வெளியேற உதவிய குற்றச்சாட்டில் கைதான பொலிஸ் அதிகாரிக்கு பிணை

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதலில் ஒரு முக்கிய சூத்திரதாரியாக சந்தேகிக்கப்படும் புலஸ்தினி மகேந்திரன் (ஸாரா ஜஸ்மின்) என்பவர் இந்தியாவிற்கு தப்பிச் செல்ல தனது வாகனத்தில் ஏற்றிச் சென்ற குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு மூன்று வருடங்களாக சிறையில் இருக்கும் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.



நாகூர்த்தம்பி அபூபக்கர் புலஸ்தினி மகேந்திரனைப் பற்றிய தகவலைத் தெரிந்தும் அதனை வெளிப்படுத்தாதமைக்காகவும். அவரை நாட்டை விட்டு தப்பிச் செல்வதற்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காகவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 13.07.2020ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு 9 மாதங்கள் தடுப்புக்காவில் வைக்கப்பட்டு 08.04.2021ஆம் திகதி கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

தான் செய்யாத குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கின்றமையானது தனது அடிப்படை உரிமையை மீறியுள்ளதாகக் கூறி பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் 2021 ஜூன் மாதம் 29ஆம் திகதி இலங்கை உயர் நீதிமன்றில் தனது சட்டத்தரணியும் மனித உரிமை செயற்பாட்டாளருமாகிய ஏ. எல். ஆஸாதினூடாக அடிப்படை உரிமை வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில் சுமார் 32 மாதங்களாக தடுப்புக்காவலிலும் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதபதி என். எம். எம். அப்துல்லாஹ் அவர்களினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். அரச சார்பில் தோன்றிய அரச சட்டத்தரணி ஸக்கி இஸ்மாயில் குறிப்பட்ட நபருக்கு பிணை வழங்கப்படுவதற்கு எதிராக தனது கடுமையான ஆட்சேபனை தெரிவித்தார். பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் அவர்கள் சார்பில் தோன்றிய சிரேஷ்ட சட்டத்தரணி என். எம். ஷஹீட், சட்டத்தரணிகளான ஏ.எல்.ஆஸாத், சலாஹுதீன் சப்ரின் மற்றும் பாத்திமா பஸீலா ஆகியோர் செய்த சமர்ப்பணங்களைச் செவியேற்ற நீதிபதி பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் பிணையில் விடுதலை செய்தார்.

# மட்டக்களப்பில் வாய்ப் புற்றுநோயின் தாக்கம் அதிகரிப்பு

சர்வதேச சுகாதார தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் மாபெரும் விழிப்புணர்வு ஊர்வலமும் வாய் பரிசோதனை முகாமும் இடம்பெற்றது.

'புன்னகைப்பதற்காக உங்கள் வாய்ச்சுகாதாரத்தையும் பல்சுகாதாரத்தையும் எண்ணி நீங்கள் ஆடம்பரப்படுங்கள்' என்ற தொனிப்பொருளில் 2023ஆம் ஆண்டுக்கான சர்வதேச வாய்ச்சுகாதார தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.




சுகாதார அமைச்சு மற்றும் தேசிய பல் வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஆகியவற்றிலிருந்து இரண்டு விழிப்புணர்வு பேரணியானது ஆரம்பமாகி மட்டக்களப்பு நகர் ஊடாக வருகை தந்து மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்தில் நடமாடும் பல்சிகிச்சை வாகனத்தில் அரச மற்றும் தனியார் பஸ் வண்டிகளின் சாரதிகள், முச்சக்கர வண்டி சாரதிகளின் வாய்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு சிறியளவிலான சிகிச்சைகள் வழங்கப்பட்ட அதேநேரம் மேலதிக சிகிச்சைகளுக்குள்ளாக்கப்பட வேண்டியவர்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# தொடர்ச்சியாக புறக்கணிக்கப்படும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

## சபையில் வெளிப்படுத்திய ஸ்ரீதரன்



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக நாடாளுமன்றில் புறக்கணிக்கப்படுவதாகவும், அவர்களின் சிறப்புரிமை மீறப்படுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் அமர்வில் உரையாற்றிய சிவஞானம் சிறீதரன், இந்த விடயம் தொடர்பில் எதிர்க் கட்சி தலைவரும் கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்தார்.

இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்காக இரண்டாவதாக தனது பெயர் இருந்தபோதும், எந்தவொரு அறிவிப்புமின்றி நான்காவதாக மாற்றப்பட்டுள்ளது என்றும் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இதன்மூலம் தான் ஓரங்கட்டப்பட்டுள்ளதாகவும், இது நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள மிகப்பெரிய சிறப்புரிமை மீறல் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடாளுமன்றத்திலுள்ள உறுப்பினர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் சரியான முறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

# இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள்

## அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குற்றச்சாட்டு



இலங்கையில் கடந்த 2022 ஆம் ஆண்டிலும் குறிப்பிடத்தக்க மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்டனி பிளிங்கன் வெளியிடப்பட்ட மனித உரிமை நடைமுறைகள் தொடர்பான வருடாந்த நாடுகளுக்கான அறிக்கையில் இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.


கடந்த 2022 ஆம் அண்டு மார்ச் மாதம் முதல் ஜூலை மாதம் வரை, நீடித்த மின்வெட்டு, அதிகரித்துச் செல்லும் உணவுப் பொருட்களின் விலைகள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை உள்ளிட்ட பொருளாதார நெருக்கடியால் நாடு உள்நாட்டு அமைதியின்மைக்கு தள்ளப்பட்டது.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள் அரசாங்கத் தலைமைப் பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும் அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுக்காகவும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

இதனையடுத்து செப்டம்பர் மாதம் வரை, மே 9 வன்முறை தொடர்பாக 3,300 இற்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்துள்ளதாகவும், 2,000 இற்கும் அதிகமானோர் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் அரசாங்கம் அறிவித்தது.

அந்த அறிக்கையின்படி, கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் அமைதியான போராட்டக்காரர்கள் என்றும், போராட்ட முகாம் மீது தாக்குதல் நடத்தியவர்கள் கைது செய்யப்படவில்லை என்றும் சிவில் சமூக அமைப்புகள் தெரிவித்துள்ளதாக அமெரிக்க அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சர்வதேச நாணய நிதியம் வழங்கிய அனுமதிக்கு அமெரிக்கா வரவேற்பு



சர்வதேச நாணய நிதியம் வழங்கிய அனுமதிக்கு வரவேற்பு தெரிவித்துள்ள அமெரிக்கா, பொருளாதார மீட்சிக்கான பாதையின் ஒரு முக்கியமான படி இதுவென்றும் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே சீர்திருத்தங்களைத் தொடரவேண்டும் என்றும் வேலைத் திட்டங்கள் மற்றும் பொருளாதாரம் பாதையை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு அனைவரும் பயன்பெறும் வகையில் சிறந்த நிர்வாகம் மற்றும் வெளிப்படைத்தன்மைக்கு தீர்வு காணும் கட்டமைப்பு மற்றும் நீடித்த சீர்திருத்தங்கள் முக்கியமானவை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேநேரம் நாடு எதிர்கொள்ளும் பாரிய பொருளாதார மந்தநிலையிலிருந்து மீள்வதற்கு வலுவான சீர்திருத்தங்கள் அவசியம் என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

மேலும் ஊழலுக்கு எதிரான சட்டத்தை மறுசீரமைப்பது உட்பட ஊழலைச் சமாளிக்கும் முயற்சிகள் தொடரவேண்டும் என்றும் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

உறுதியான வங்கி முறையை பராமரிப்பது மிகவும் முக்கியம் என்றும் நிதி மேற்பார்வை மற்றும் நெருக்கடி மேலாண்மை கட்டமைப்பை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

# உலக மகிழ்ச்சி அறிக்கையில் இலங்கைக்கு கிடைத்த இடம்

உலக மகிழ்ச்சி அறிக்கை 2023 இன் படி, இலங்கை 112 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொடர்ந்தும் ஆறாவது இடத்தில் பின்லாந்து உலகின் மகிழ்ச்சியான முதல் இடத்தை பெற்றுள்ளது.

இந்த அறிக்கையின்படி இலங்கையின் நிலை 2022ஆம் ஆண்டு 127வது இடத்தில் இருந்ததை விட மேம்பட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள மகிழ்ச்சியான இடங்களைக் கண்டறிய, ஆராய்ச்சியாளர்கள் ஆறு முக்கிய காரணிகளை பகுப்பாய்வு செய்துள்ளனர்.

சமூக ஆதரவு, வருமானம், ஆரோக்கியம், சுதந்திரம், தாராள மனப்பான்மை மற்றும் ஊழல் இல்லாமை என்பனவே அவையாகும்.

நெருக்கடிகள் இருந்தபோதிலும், உலகளாவிய வாழ்க்கை திருப்தி தொற்றுநோய்க்கு முந்தைய ஆண்டுகளில் இருந்ததைப் போலவே இருப்பதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான ஏரிகள் மற்றும் முடிவில்லா காடுகளுடன் அமையப்பெற்றுள்ள வடதுருவ நாடான பின்லாந்து, அதன் விரிவான நலன்புரி அமைப்பு, அதிகாரிகள் மீது அதிக நம்பிக்கை மற்றும் அதன் 5.5 மில்லியன் மக்களிடையே குறைந்த அளவிலான சமத்துவமின்மை ஆகியவற்றிற்காக தொடர்ந்தும் முதல் இடத்தை பெற்று வருகிறது.

யுக்ரைனின் மகிழ்ச்சித் தரவரிசை இந்த ஆண்டு 98ல் இருந்து 92க்கு முன்னேறியது, ரஷ்ய படையெடுப்பு இருந்தபோதிலும் இது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மகிழ்ச்சி தரப்பட்டியலில் டென்மார்க் இரண்டாவது இடத்திலும் ஐஸ்லாந்து மூன்றாம் இடத்திலும் இஸ்ரேல் நான்காவது இடத்திலும் உள்ளன. 2020 முதல் அட்டவணையில் அடிமட்ட இடத்தைப் ஆப்கானிஸ்தான் பெற்றுள்ளது.

இந்த தரவரிசையில் அண்டை நாடான இந்தியா 126வது இடத்திலும், பாகிஸ்தான் 108வது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஏழைகள் பாதுகாக்கப்பட வேண்டும்!

## இலங்கையிடம் சுட்டிக்காட்டிய ஐ.எம்.எப்




சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, வரவு-செலவுத் திட்ட இடைவெளி மற்றும் பொதுக் கடனைக் குறைக்க நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகள் பொது வருவாய் அதிகரிப்பின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், அதற்காக தொடர்ந்து செயல்படுத்துவது அவசியம் என்றும் தெரிவித்தார்.

வரி சீர்திருத்தங்களை அரசு மேற்கொண்டாலும், அவற்றை அமுல்படுத்தும் போது ஏழை மக்கள் பாதுகாக்கப்படும் வகையில் சமூக பாதுகாப்பு வலை வலுப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் இலங்கைக்கு 4 வருட காலத்திற்கு விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியதையடுத்து கிறிஸ்டலினா ஜோர்ஜீவா இதனைத் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட இடைவெளியை வெற்றிகரமாகக் குறைக்க நிறுவன சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது இன்றியமையாதது என்று ஜோர்ஜீவா கூறியுள்ளார்.

ஊழலுக்கு எதிரான சட்டங்களை சீர்திருத்தம் உட்பட ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் நீடித்திருக்க வேண்டும் என்றும், இலங்கையில் பரந்த ஊழல் எதிர்ப்பு சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் ஜோர்ஜீவா கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் முன்னெடுக்கப்படும் இலங்கையின் ஊழல் எதிர்ப்பு மற்றும் கட்டுப்பாட்டு கட்டமைப்பின் மதிப்பீடு வழிகாட்டல் வழங்க வேண்டும் என ஜோர்ஜீவா சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருளாதார வளர்ச்சி விகிதத்தை விரைவுபடுத்தும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை செயல்படுத்துவது மேம்பாட்டு பங்காளிகளின் தொழில்நுட்ப உதவியுடன் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று ஜோர்ஜீவா கூறியுள்ளார்.

பொருளாதாரத் துறையின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த, போதுமான அளவு மூலதனமயமாக்கப்பட்ட வங்கி முறையைப் பராமரிப்பது மற்றும் வங்கி மறுமூலதனத் திட்டத்தை செயல்படுத்துவது, நிதி மேற்பார்வை மற்றும் நெருக்கடி மேலாண்மை கட்டமைப்பை வலுப்படுத்துவது முக்கியம் என்று ஜோர்ஜீவா சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தை நம்பிக்கையின் மீள் வருகையுடன், அண்மையில் அதிகாரிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட நெகிழ்வான மாற்று விகிதங்கள் நாட்டில் உத்தியோகபூர்வ இருப்புக்களை மீளக் கட்டியெழுப்ப உதவும் என்றும், பணவீக்கத்தைக் குறைப்பதற்கான உத்திகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் என்றும் ஜோர்ஜீவா கூறியுள்ளார்.

# ஆனையிறவில் ஆடும் சிவன்



நிலாந்தன்



யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் ஆனையிறவுக்கு அருகே,கண்டி வீதியில் தட்டுவன்கொட்டிச் சந்தியில் ஒரு நடராஜர் சிலை நிறுவப்பட்டிருக்கிறது.கரைசிப்பிரதேச சபையின் ஒழுங்கமைப்பில் புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியோடு 27 அடி உயரமான அந்தச் சிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.இலங்கைத்தீவில் உள்ள மிக உயரமான நடராஜர் சிலை அதுவென்று கூறலாம்.

2009க்கு பின் ஆனையிறவுப் பிரதேசம் யுத்த வெற்றிவாதத்தின் உல்லாசத் தலங்களில் ஒன்றாக மாற்றப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் பண்பாட்டு தலைநகரமாகிய கவர்ச்சிமிகு யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் எவரும் முதலில் ஆனையிறவில் அமைக்கப்பட்டிருக்கும் இரண்டு யுத்த வெற்றி வளாகங்களைக் கடந்துதான் உள்ளேவர வேண்டும்.அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள். இது எங்களால் வெற்றி கொள்ளப்பட்ட நிலம் என்று பொருள்.

யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் பொழுது குடாநாட்டின் கழுத்துப் பகுதியில் முதலில் தென்படுவது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தோல்வியுற்ற படை நடவடிக்கை ஒன்றின்போது பயன்படுத்தப்பட்ட உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஒரு கவச வாகனம். அதற்கருகில் அந்தக் கவச வாகனத்தை தடுத்து நிறுத்திய படை வீரர் ஒருவரின் நினைவுச் சின்னம்.அதோடு சேர்த்து ஒரு விருந்தகம். அதைச் சற்றுத் தாண்டிச் சென்றால் வலது பக்கத்தில் கடலேரியின் பின்னணியில் பிரம்மாண்டமான ஒரு யுத்த வெற்றிச்சின்னம் உண்டு.இலங்கைத்தீவை இரண்டு

> ஈழத்தமிழர்களின் நவீன அரசியலானது மதப் பல்வகமையின் மீதுதான் கட்டியெழுப்பப்பட்டது. அதை இப்பொழுது ஒரு மதத்துக்கு மட்டும் உரியதாக குறுக்கக் கூடாது. குறிப்பாக நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது திருச்சபைகளுக்கும் ஆறுமுகநாவலர் போன்ற மதப் பெரியார்கள் மற்றும் இந்துபோர்ட் போன்ற இந்து அறக்கட்டளைகளுக்கும் இடையிலான போட்டியின் திரண்ட விளைவுதான்.ஆனால் அந்தப் போட்டியானது மத விரோதமாக, மோதலாக மாறவில்லை.

கைகள் ஏந்தியிருப்பது போன்ற அந்த யுத்த வெற்றிச் சின்னந்தான் யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் வெளியாட்களை வரவேற்கின்றது. அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள்.

இவ்வாறு கடலேரியின் உப்புக் காற்றில் எப்பொழுதும் யுத்த வெற்றி வாடை வீசும் ஒரு பிரதேசத்தில்,தமிழ் மக்களின் வழிபாட்டுருக்களில் ஒன்றாகிய நடராஜர் சிலையை நிறுவியமை என்பது அரசியல் அர்த்தத்தில் கவனிக்கப்பட வேண்டியது.

அச்சிலையின் அழகியல் அம்சங்களைக் குறித்தும் அது பார்த்த உடனேயே கையெடுத்துக் கும்பிடக்கூடிய ஒரு சிலையாக இருக்கிறதா இல்லையா என்பதைக் குறித்தும் பின்னர் தனியாக ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறேன்.இன்று இக்கட்டுரையில் நான் கூறவருவது அச்சிலைக்குப் பின்னால் இருக்கும் பிரதேச,பிராந்திய மற்றும் கட்சி அரசியலைப் பற்றி.

நாவற்குழிச் சந்தியை போலவே ஆனையிறவிலும் அதாவது யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் தமிழ் மக்களை அடையாளப்படுத்தும் கட்டுமானங்கள் அவசியம்.அரசாங்கம் அதைத் திட்டமிட்டு யுத்தவெற்றி வாசலாகக் கட்டியெழுப்பி வைத்திருக்கிறது.தமிழ்மக்கள் அதனை ஒரு மரபுரிமை வாசலாக மாற்ற வேண்டும். அந்த அடிப்படையில் சிந்தித்து கரைச்சி பிரதேசசபை முடிவெடுத்திருந்திருந்தால் அது வரவேற்கத்தக்கதே.

நாவற்குழியில் ஒரு புத்த விகாரை கட்டியெழுப்பப்பட்டுவரும் ஒரு நிலக்காட்சியில்,சிவபூமி அறக்கட்டளையின் அருங்காட்சியகமும் திருவாசக அரண்மனையும் கட்டப்பட்டிருப்பது போல,ஆனையிறவிலும் யுத்தவெற்றி வாசலை எதிர்நோக்கி ஒரு மரபுரிமை வாசலை சிருஷ்டிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு.

ஆனால் அந்த மரபுரிமைக் கட்டமைப்பானது எப்படி அமைய வேண்டும்?அது சிங்கள பௌத்த சின்னங்களுக்கு எதிராக சைவச் சின்னங்களை முன் நிறுத்தும் ஒன்றாக அமைய வேண்டுமா? அல்லது தமிழ்த் தேசியத்தின் மதப்பல்வகைமையை பிரதிபலிக்கும் ஒன்றாக அமைய வேண்டுமா?

சிவபூமி அறக்கட்டளை ஒரு சமய நிறுவனம்.அது தான் போற்றும் ஒரு சமயத்தை முன்னிறுத்தும்.ஆனால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அப்படிச் சிந்திக்கத் தேவையில்லை.மேலும் பொதுவெளிச் சிற்பம் வேறு,மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் விக்கிரகம் வேறு.இரண்டையும் ஒன்றாகக் கண்டு மயங்கும் பொதுப்புத்தியை அரசியல்வாதிகள் இலகுவாகக் கையாள்வார்கள்.

பிரயோக தேசியவாதமும் நடைமுறையில் பொதுப்புத்தியின் மீதே கட்டியெழுப்பப்படுகிறது.ஆனால்,தேசியவாதத்தின் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்க வேண்டும் என்று மேற்கத்திய அறிஞர்கள் கூறுவார்கள்.அதாவது ஜனநாயக அடிச்சட்டத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக் கட்டவேண்டும்.இதை இன்னும் ஆழமாக சொன்னால், ஒருவர் மற்றவருக்கு சமம் என்ற அடிப்படையில் மக்களைத் திரட்டவேண்டும்.இதை இன்னும் நடைமுறை வார்த்தைகளில் சொன்னால், ஒரு மதம் இன்னொரு மதத்திற்கு சமம் ஒரு பிரதேசம் இன்னொரு பிரதேசத்துக்கு சமம் யாரும் பிரதேச ரீதியாகவோ சாதி ரீதியாகவோ மத ரீதியாகவோ ஒருவர் மற்றவருக்கு மேலானவரும் அல்ல




07 ஆம் பக்கத்தில் மிகுதி ...

# ஆனையிறவில் ஆடும் சிவன்



கீழானவரும் அல்ல என்ற அடித்தளத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக்கட்ட வேண்டும்.எனவே தேசியவாதம் எனப்படுவது மதப்பல்வகைமையின் மீதே கட்டியெழுப்பப்பட வேண்டும்.மத மேலாண்மையின் மீது அல்ல.இந்த அடிப்படையில் சிந்தித்து தமிழ்மக்கள் தமது மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்கவும் முன்நிறுத்தவும் வேண்டும்.

ஒவ்வொரு மதப்பிரிவும் அதனதன் மதச்சின்னங்களை முன்னிறுத்துவதில் தவறில்லை.அது அந்த மதத்தின் கூட்டுரிமை. ஆனால் ஒரு மதம் இன்னொரு மதத்தை அவமதிக்கும்போது அல்லது அந்த மதச் சின்னங்களை அழிக்கும்போது அல்லது ஒரு மதத்தின் மேலாண்மையை நிறுவ முற்படும் போதுதான் பிரச்சினை வருகிறது.அதாவது மதப்பல்வகைமை வேறு மத மேலாண்மை வேறு. அண்மை ஆண்டுகளாக தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பிலும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இந்திய மத்திய அரசை அணுகுவதற்கு மதத்தை ஒரு வாகனமாக பயன்படுத்த முயற்சிப்பது தெரிகிறது.இதில் சில தமிழ் அரசியல்வாதிகளும் அடங்குவர். இந்தியாவை ஆளும் பாரதிய

ஜனதா கட்சியின் மதசார்பு நிலைப்பாட்டைப் பின்பற்றி அதன்மூலம் இந்திய மத்திய அரசாங்கத்தை அணுக முடியுமா என்று மேற்படி தரப்புக்கள் சிந்திக்கின்றன.பாரதிய ஜனதா அரசாங்கமானது இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று. எனவே ஈழத் தமிழர்கள் அந்த அரசாங்கத்தைத்தான் அணுக வேண்டும்.ஆனால் அதன் பொருள் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் பாரதிய ஜனதா பின்பற்றும் அதே நிகழ்ச்சி நிரலை ஈழத் தமிழர்களும் பின்பற்ற வேண்டும் என்றில்லை.

இப்பிராந்தியம் இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துட் காணப்படுகிறது. இந்தியாவை மீறி எந்த ஒரு வெளிச்சக்தியும் ஈழத் தமிழர்களுக்கு ஒரு தீர்வைத் தரமுடியாது. இப்பிராந்திய யதார்த்தத்துக்கூடாக சிந்திக்கும்போது ஈழத்தமிழர்கள் பாரதிய ஜனதா அரசாங்கத்தைத்தான் அணுக வேண்டும்.ஆனால் அதன் பொருள் தமிழ் தேசியத்தின் மதப்பல்வமையை பலியிட வேண்டும் என்பதல்ல.

ஈழத்தமிழர்களின் நவீன அரசியல் எனப்படுவது மதப்பல்வகமையின் மீதே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது.பெருமளவு இந்துக்களைக் கொண்ட ஈழத் தமிழ்ச் சமூகத்தில் முதலில் தோன்றிய இளையோர் அமைப்பாகிய யாழ்ப்பாண வாலிபர் முன்னணியை உருவாக்கியது(1924) ஒரு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவராகிய கன்டிபேரின்பநாயகந்தான்.

தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டபோது, அதன் கால்கோல் விழா 1949ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி மாவட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் சீலஸ்ரீ துரைசாமிக் குருக்களின் ஆசியுடன் இடம் பெற்றது.இது தொடர்பான தகவல்களை தமிழரசுக் கட்சியின் வெள்ளி விழா மலரில் காணலாம்.அக்கட்சியின் தலைவராகிய செல்வநாயகம் ஒரு புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர்.செல்வநாயகத்தை ஈழத்தமிழர்கள் தந்தை என்றும் ஈழத்துக் காந்தி என்றும் அழைத்தார்கள். தந்தை செல்வா இறந்தபோது அவருடைய உடல் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்யப்படவில்லை. இந்து முறைப்படி வேட்டி அணிவிக்கப்பட்டு,தகனம் செய்யப்பட்டது.தன்னைத் தலைவராக தெரிந்தெடுத்து,தந்தை என்று அழைத்த பெரும்பான்மை இந்து வாக்காளர்களை கௌரவிப்பதற்காக செல்வநாயகம் அவ்வாறு கேட்டுக் கொண்டதாக கருதப்படுகிறது.




எனவே ஈழத்தமிழர்களின் நவீன அரசியலானது மதப் பல்வகமையின் மீதுதான் கட்டியெழுப்பப்பட்டது.அதை இப்பொழுது ஒரு மதத்துக்கு மட்டும் உரியதாக குறுக்கக் கூடாது.குறிப்பாக நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது திருச்சபைகளுக்கும் ஆறுமுகநாவலர் போன்ற மதப் பெரியார்கள் மற்றும் இந்துபோர்ட் போன்ற இந்து அறக்கட்டளைகளுக்கும் இடையிலான போட்டியின் திரண்ட விளைவுதான்.ஆனால் அந்தப் போட்டியானது மத விரோதமாக,மோதலாக மாறவில்லை. ஆனால்,2009க்குப் பின்

> நாவற்குழியில் ஒரு புத்த விகாரை கட்டியெழுப்பப்பட்டுவரும் ஒரு நிலக்காட்சியில், சிவபூமி அறக்கட்டளையின் அருங்காட்சியகமும் திருவாசக அரண்மனையும் கட்டப்பட்டிருப்பது போல,ஆனையிறவிலும் யுத்தவெற்றி வாசலை எதிர்நோக்கி ஒரு மரபுரிமை வாசலை சிருஷ்டிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு. ஆனால் அந்த மரபுரிமைக் கட்டமைப்பானது எப்படி அமைய வேண்டும்? அது சிங்கள பௌத்த சின்னங்களுக்கு எதிராக சைவச் சின்னங்களை முன் நிறுத்தும் ஒன்றாக அமைய வேண்டுமா? அல்லது தமிழ்த் தேசியத்தின் மதப்பல் வகைமையை பிரதிபலிக்கும் ஒன்றாக அமைய வேண்டுமா?

எந்த ஒரு மதத் தலைவரும் துணிந்து கதையாத ஒரு வெற்றிடத்தில், ஒற்றைக் குரலாக ஒலித்த, முன்னாள் ஆயர் ராயப்பு ஜோசப் அவர்களுடைய அதே மறை மாவட்டத்தில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான முரண்பாடு தூக்கலாகத் தெரிவது தமிழ்த் தேசியத் திரட்சிக்குப் பாதகமானது. தமிழ்த் தேசியத்தை மதப்பல்வகைமையின் மீது கட்டியெழுப்ப விரும்பும் எல்லாச் சக்திகளும் அந்த முரண்பாட்டைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

அவ்வாறு அகமுரண்பாடுகளைத் தீர்க்கும் சக்திமிக்க சிவில் அமைப்புகளோ கட்சிகளோ இல்லாத அரசியல் மற்றும் ஆன்மீக வெற்றிடத்தில்,இன்னொருபுறம்,சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் எல்லைக் கற்களாக புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு வருமோர் ராணுவஅரசியற் சூழலில்,தமிழ் மக்கள் மத்தியிலும் இரவோடிரவாகச் சிலைகள் முளைக்கத் தொடங்கிவிட்டன. இவ்வாறான சிலை அரசியலின் பின்னணியில்,ஆனையிறவில் நடராஜர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

சிவ நடனத்துக்கு ஆன்மீக வியாக்கியானம் மட்டுமல்ல,பௌதீகவியல் வியாக்கியானமும் உண்டு.அது ஒரு பிரபஞ்ச நடனம் என்று வர்ணிக்கப்படுகிறது (cosmic dance).ஆனையிறவுச் சிவனுக்கு மேலதிகமாக ஓர் அரசியல் பரிமாணமும் உண்டு.உப்புக் காற்றில் யுத்த வெற்றிச் சின்னங்களின் மத்தியில்,சிவனார் யாருடைய பஜனைக்கு ஆடப்போகிறார்?

காதலனை பிரிந்தவளின்
மனம் போல ஒன்று
கவி பாடிப் பரிசு பெறான்
மனம் போல ஒன்று
தீது பழி கேட்டவன் தன்
மனம் போல ஒன்று
செய்த பிழைக் கலங்குபவன்
மனம் போல ஒன்று
நீதி பெறா வேழைதுயர் மனம்
போல ஒன்று
நிறைபழித்த கற்புடையாள்
மனம் போல ஒன்று
காது மழுக் காறுடையான்
மனம் போல ஒன்று
கனவேறு மெழு நீர்கள் உண்டு
கன்னி யாயில்

# கன்னியா வெந்நீர் ஊற்று சூடு பிடிக்குமா?



**என** கன்னியா வெந்நீர் ஊற்றை பற்றி நாவலியூர் சோமசுந்தர புலவர் எழுதிய பாடலுடன் எனது இந்த கட்டுரையை தொடர்கின்றேன். கன்னியா வெந்நீரூற்று திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஒரு இயற்கை வெந்நீரூற்று ஆகும். குறிப்பிட்ட அந்த இடத்தில் 90 - 120 செ.மீ ஆழமுடைய ஏழு சிறிய சதுர வடிவான கிணறுகள் அமைந்துள்ளன. இயற்கையாகவே ஏற்பட்டிருந்த வெந்நீரூற்றில் நாளடைவில் செயற்கைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிணற்றிலுமிருந்து வெள;வேறு வெப்பநிலையில் நீர் ஊறி வந்து கொண்டிருக்கும். இலங்கையில் அடையாளம் காணப்பட்ட பல வெந்நீரூற்றுக்கள் இருந்தாலும் கன்னியா வெந்நீரூற்றுக்கள் சமய நம்பிக்கையிலும் விஞ்ஞான ரீதியிலும் பல சிறப்புகளைப் பெற்று தனித்துவமாக மிளிர்கின்றது. முக்கியாக கன்னியாவில் உள்ள ஏழு வெந்நீரூற்றுகளிலும் ஏழு வித்தியாசமான வெப்பநிலைகளில் தண்ணீர் இருப்பதுதான் அதிசயம். இலங்கையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வரவேற்பை பெற்ற இடங்களுள் கன்னியா வெந்நீரூற்று முக்கியம் பெறுகின்றது. திருகோணமலை நகரில் இருந்து 3.9 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது கன்னியா வெந்நீரூற்று. இக்கிணற்றுகளுக்கே என தனித்துவமான வரலாற்றுக் கதையும் உள்ளது. திருகோணமலை சம்பந்தப்பட்ட ஐதீகொ புராணக் கதைகள் பெரும்பாலும் இராவணன் சம்பந்தப்பட்டவை. கன்னியா வெந்நீரூற்றும் இராவணனோடு சம்பந்தப்பட்ட ஒன்றாகத்தான் நம்பப்படுகின்றது. சிவபெருமானின் தீவிர பக்தனாக இருந்த இராவணன் திருகோணமலையில் குடிகொண்டிருக்கும் கோணேஸ்வரர் கோயிலுக்கு சென்றான். அங்கு வீற்றிருந்த சிவலிங்கத்தைக் கண்டு வியந்து அந்த லிங்கத்தை அவனின் தாயின் வணக்கத்திற்காக கொண்டு செல்ல விரும்பினான். இதனால் பாறையின் மீது இருந்த சிவலிங்கத்தை தனது வாளால் வெட்டி பெயர்த்து எடுக்க முற்பட்டான். இதனால் கடும் கோபம் கொண்ட சிவன் அந்த பாறையை தனது காலால் அழுத்தியதால் இந்த பாறைக்குள் சிக்குண்டான் இராவணன்.

இதைக்கேள்வியுற்ற அவன் தாய் தனது மகன் இறந்து விட்டதாக எண்ணி அதிர்ச்சியில் உயிரிழந்தாள். ஆனால் இராவணனோ இறக்கவில்லை. சிவனை பிரார்த்தனை செய்து தாம் செய்த செயலை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான். தனது பக்தனைச் சிவனும் மன்னித்தார். கோணநாயகரிடம் பெற்ற லிங்கத்தை கையிலேந்திக் கொண்டு இராவணன் செல்லும்போது விஷ்ணு அந்தண வடிவம் எடுத்து இராவணனைச் சந்தித்து தாயார் உயிர் நீத்த செதியைத் தெரிவித்தார். இதைக் கேட்டதும் இராவணன் துக்கக் கடலில் மூழ்கினான். அந்தணன் அவரைத் தேற்றியபின் இறுதிக் கிரியைகளைச் செயுமாறு நினைவுறுத்தி இப்புண்ணிய தலத்தில் கருமாதிக் கிரியைகளைச் செய்தால் அவர் மோட்சத்தை அடைவது திண்ணம் என்று கூறினார். ஈமக்கிரியைகளை அந்தணரையே செய்யச் சொல்லி இராவணன் வேண்டொ அதற்குச் சம்மதித்த அந்தணர் இராவணனை அழைத்துக் கொண்டு திருகோணமலைக்கு மேற்கிலுள்ள கன்னியா என்னும் தலத்திற்குச் சென்று அவ்விடத்தில் தமது கையில் இருந்த தடியினால் ஏழிடத்தில் ஊன்றினார். அந்தண வடிவம் கொண்டு மகாவிஷ்ணு ஊன்றிய ஏழு இடங்களில் நீரூற்றுக்கள் தோன்றின எனப் புராணங்ககள் கூறுகின்றன. இவ்விடத்தில் அந்தியேட்டி கடமைகள் செயப்படின் அவ்வான்மாக்கள் முத்தியடையும் என்று நம்பப்படுகிறது. உலகில் பல இடங்களில் இது போன்ற வெந்நீர் ஊற்றுக்கள் காணப்படுகின்றன. இலங்கையில் வெந்நீர் ஊற்றுக்கள் அம்பாந்தோட்டை முதல் திருகோணமலை வரை கன்னியா உட்பட 10 இடங்களில் காணப்படுகின்றன. இதுதவிர ஆரம்ப காலங்களில் கண்ணகி வழிபாடு திருகோணமலை கன்னியா பிரதேசத்தில் இருந்திருக்கலாம் எனவும் கண்ணகி என்ற பெயர் காலப்போக்கில் மருவி கன்னியா என்று மாறிப்போயிருக்கும் என்று வரலாற்று ஆசிரியர்கள் சொல்கிறார்கள். வரலாற்று ரீதியாக தமிழர் அடையாளமாக இவை திகழ்ந்தாலும் தற்போது இங்கு பெரும்பான்மையினர் ஆதிக்கம் மேலோங்கியிருக்கிறது. இதனை சூழ பௌத்த ஆலயங்களை அமைத்து முற்றிலும் பௌத்த புனித தலமாக மாற்றியமைத்துக்கொண்டு வருகின்றனர்.



> **போர் முடிவுற்றதன் பின்னர் இந்த உல்லாசப் பிரயாண மையத்தைச் சிங்களமயமாக்கும் நடவடிக்கைகள் நடைபெற்று வந்தமையால் பல்வேறு தரப்பினரும் இதற்கு எதிர்ப்புக்களை தெரிவித்து வந்தனர். வெந்நீரூற்றுப் பிரதேசத்தில் தமிழ் மொழியிலும் செய்தியைக் கொண்டிருந்த அறிவிப்புப் பலகை அகற்றப்பட்டு ஆங்கிலம் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே செய்தியைக் கொண்ட அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்கே விநியோகிக்கப்படும் நுழைவுச் சீட்டில் அந்தப் பிரதேசம் ஒரு பௌத்தமதப் பிரதேசம் எனவும் அறியத் தரப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக திருகோணமலை பட்டிணமும்சூழலும் பிரதேசத்திற்கான உள்ளூராட்சி மன்றத்தின் பராமரிப்பிலிருந்த கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிரதேசம் 2010 ஆம் ஆண்டு தொல்பொருள் ஆய்வு மற்றும் வன பரிபாலனம் என்ற காரணங்களை கூறி சபையின் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் பறிமுதல் செய்யப்பட்டது.**

10 ஆம் பக்கத்தில் மிகுதி ...




# கன்னியா வெந்நீர் ஊற்று சூடு பிடிக்குமா?

பெயர் பலகைகளில் கூட தமிழர்களுக்கான இடம் மறுக்கப்பட்டுள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். தமிழர்களுக்கே உரித்தான கலை கலாசார பொக்கிசங்களுள் ஒன்றான கன்னியா வெந்நீரூற்றை பாதுக்காத்துகொள்வது தமிழர்களின் கடமையும் கூட. உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இந்த வெந்நீரூற்று இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்த காலத்தின் போது களையிழந்து காணப்பட்டது. ஆயினும் யுத்தம் முடிவுற்றதன் பின்னர் தற்போது அதிகமாக உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் ஒரு சுற்றுலாத் தலமாக இந்த கிணறுகள் திகழ்கின்றன.

போர் முடிவுற்றதன் பின்னர் இந்த உல்லாசப் பிரயாண மையத்தைச் சிங்களமயமாக்கும் நடவடிக்கைகள் நடைபெற்று வந்தமையால் பல்வேறு தரப்பினரும் இதற்கு எதிர்ப்புக்களை தெரிவித்து வந்தனர். வெந்நீரூற்றுப் பிரதேசத்தில் தமிழ் மொழியிலும் செய்தியைக் கொண்டிருந்த அறிவிப்புப் பலகை அகற்றப்பட்டு ஆங்கிலம் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே செய்தியைக் கொண்ட அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்கே விநியோகிக்கப்படும் நுழைவுச் சீட்டில் அந்தப் பிரதேசம் ஒரு பௌத்தமதப் பிரதேசம் எனவும் அறியத் தரப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக திருகோணமலை பட்டிணமும்சூழலும் பிரதேசத்திற்கான உள்ளூராட்சி மன்றத்தின் பராமரிப்பிலிருந்த கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிரதேசம் 2010-ம் ஆண்டு தொல்பொருள் ஆய்வு மற்றும் வன பரிபாலனம் என்ற காரணங்களை கூறி சபையின் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வந்த வழமையான பாதை மூடப்பட்டு 2014 ம் ஆண்டு புதிய பாதையொன்று அமைக்கப்பட்டுவது கன்னியா வெந்நீர் ஊற்று பிரதேசத்தில் பெரும்பான்மை சமூக மக்களை குடியேற்றுவதற்கான வேலைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை நாம் யாவரும் அறிந்த விடயமாகும். திருகோணமலை மாவட்ட இந்துக்கள் பெரும்பாலும் சமய மரபுகளின் படி இந்த தலத்திலேயே இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்கான அந்தியேட்டிக் கிரியைகளை செய்துவருகின்றனர். ஏழு வெந்நீர் ஊற்றுக் கிணறுகளைக் கொண்ட கன்னியா பகுதியில் இப்போது இந்து மத அடையாளங்கள் அருகி பௌத்த வழிபாட்டுக்குரிய அடையாளங்களே முன்னிலை படுத்தப்பட்டுவருவதாக இந்து மக்கள் தெரிவிக்கின்றனர். காலம் காலமாக இலங்கையில் இருந்து வரும் இந்து சமய வழிபாட்டு தலங்களை பேரினவாத சிங்கள பௌத்தர்கள் தமது என்று சொந்தம் கொண்டாடி வருகின்றனர். இந்த நிலைமை இனியும் தொடராது மக்களாய் நாம் ஒன்றிணைந்து நமது மரபு வழி வழிப்பாட்டு தளங்களின் அடையாளங்களை பாதுகாப்பதற்கு ஒன்றிணைய வேண்டும்.

பேரின வாதத்தின் இனச்சுத்திகரிப்பு என்பது அந்த இனத்தின் அடையாளங்களை அழிப்பதைப் பிரதான வழிமுறையாகக் கொண்டுள்ளது. வரலாற்று உண்மைகள் தடையங்களை அழித்தும் அவற்றைப் பேரினவாத அடையாளமாக முன்னிறுத்துவதும் இனச்சுத்திகரிப்பின் அடிப்படைகளாக அமை



கின்றன. அழிக்கப்படும் வரலாற்றுத் தடயங்களைப் பாதுகாத்தல் என்பது பேரினவாதத்திற்கு எதிரான அரசியலின் முக்கிய கூறாக அமைகிறது. ஒடுக்கப்படும் இனத்தின் அடையாளங்களை அழித்து அதனை ஒடுக்கும் இனம் பிரதியீடு செய்யும் நிகழ்ச்சிப் போக்கிற்கு எமது கண்முன்னே காணக்கிடைக்கும் உதாரணம் திட்டமிட்டு அழிக்கப்படும் வரலாற்று ஆதாரமான கன்னியா வெந்நீரூற்று இரத்த சாட்சியாய் உறைந்து கிடக்கின்றது. கடந்த 10 வருட காலத்திற்கும் மேலாக பேரினவாதிகளினால் இந்த வெந்நீரூற்று சொந்தம் கொண்டாடப்பட்டு வருகின்றது. பேரினவாதிகளின் இந்த செயற்பாடு தமிழர்களின் பாரம்பரிய வரலாற்று உரிமை மறுதலிப்பு என்பதே சரியானதாகும். இன்று திருக்கோணமலையை மையப்படுத்திய தமிழ் அரசியல் கட்சிகளும் அதன் உறுப்பினர்களும் தமிழர் குடியேற்றம் என்ற போர்வையில் இந்து கோவில் நிலங்களையும் பொதுசொத்துக்களை மறைமுகமாக விற்பனை செய்து தமது சொந்த கஜானாக்களை நிரப்புவதில் அக்கறை கொண்டுள்ளார்களே தவிர திருக்கோணமலையில் தமிழர்களின் பாரம்பரிய உரிமைகளையும் வரலாற்று அடையாளங்களையும் பாதுகாத்து தமிழர்களின் இருப்பை பாதுகாக்கும் நோக்கிலான எந்த செயல் திட்டங்களையும் முன்னெடுப்பதில் அக்கறை கொள்பவர்களாக இல்லை என்பதே உண்மை. கன்னியா வெந்நீர் ஊற்று பகுதியில் பேரினவாதம் முன்னெடுத்து வரும் வரலாற்று திரிபுபடுத்தல்களை சட்டபூர்வமாவதை தடுப்பதற்கான முயற்சிகளை இனியாவது காலதாமதமின்றி மேற்க்கொள்ள தவறின் கன்னியா வெந்நீர் ஊற்றுக்களும் அந்த பிரதேசமும் வில்கம் விகாரையின் ஒரு பகுதியாக பிரகடனப்படுத்துவது நிச்சயம் நடந்தேறும். தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் பேரினவாதத்தின் செயற்திட்டங்கள் ஆர்ப்பாட்டம எதுவுமின்றி அமைதியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதேவேளை தமிழர் தாயகத்தின் வரலாற்று உரிமைகளையும் அவற்றின் அடையாளங்களையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களும் தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்து தமது பிரதி நிதிகளாக பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டவர்களான தமிழ் அரசியல்வாதிகள் தமது கடமை பொறுப்புக்களில் இருந்து விலகி வெகு தூரம் நிற்பதையே கன்னியா வெந்நீர் ஊற்று விவகாரம் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றது. எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் வெந்நீர் ஊற்று விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தின் கவனத்தை ஈர்க்க முயலாமையானது வேதனைக்குரியதும் வெட்கப்படவேண்டியதும் கண்டனத்துக்குரியதுமான விடயமாகும். பாராளுமன்றத்தின் மூலம் தமழ் மக்களுக்கு நியாயமான தீர்வுஎஒன்றினை பெறமுடியாதென்றாலும் தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான குரல்களும் செல்லா காசென்பதை இதன் மூலம் முழு உலகுக்கும் வெளிப்படுத்தியிருக்கமுடியும். ஆக ஈழத்தமிழரை பொறுத்தவரை உருப்படியான அரசியல் தலைமைத்துவம் ஒன்று இல்லாத நிலைமைக்குள்ளாகியுள்ளனர் என்பதே உண்மை நிலவரமாகும். இந்த நிலைமை உடனடியாக நிவர்த்தி செய்யப்படவேண்டிய விடயமாகும் இவ் இவிடயத்தில் புலம்பெயர் உறவுகளும் உள்நாட்டு புத்திஜீவிகளும் சமூகபற்றாளர்களும் அக்கறையுடன் செயல்படவேண்டிய அவசியத்தை கன்னியா வெந்நீர் ஊற்று விவகாரம் வலியுறுத்தி நிற்கிறது.

# கிழக்கிலங்கையில் உதயமாகவுள்ள சிவபூமி திருமந்திர அரண்மனை



உலக அதிசயமாக கிழக்கிலங்கையில் சிவபூமி திருமந்திர அரண்மனை திறந்துவைக்கப்படவுள்ளது என செஞ்சோற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

கிழக்கிலங்கை வரலாற்றில் சிவபூமி திருமந்திர அரண்மனை மார்ச் மாதம் 24ஆம் திகதி மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இலங்கை சிவபூமி அறக்கட்டளையினால் நிறுவப்பட்டுள்ள திருமந்திர அரண்மனை சம்பிரதாயபூர்வமாக திறந்த வைக்கப்படவுள்ளது.

3 ஆயிரம் தமிழ் பாடல்கள் பல நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்றுப் பெட்டகமான திருமந்திரத்தை கையால் உளிகொண்டு மூன்று ஆண்டுகளாக இளைஞர்கள் கருங்கல்லில் செதுக்கியுள்ளனர்.

இந்தப் பாடல்களை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வீதியில் அமைக்கப்பட்டுள்ள திருமந்திர அரண்மனையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

108 சிவலிங்கமும் நடுவில் கருங்கல்லினால் ஆக்கப்பட்ட கோவிலில் முகலிங்கப்பெருமானும் கிழக்கிலங்கையில் முதல் முதலாக வித்தியாசமான முறையில் காட்சியளிக்கின்றது. கிழக்கிலங்கையில் தானாகத் தோன்றிய தான்தோன்றிஸ்வரர் போத்துக்கேயர் அந்த இடத்திற்கு வந்தபோது இந்த மாடு கருங்கல் மாடு சாணிபோடுமா என்று கேட்டபோது அந்த மாடு எழுந்து நின்று போட்ட சாணி கருங்கல் சாணியாக இன்றைக்கும் பாதுகாக்கப்படுகின்றது.

போர்த்துக்கேய தளபதிகளே இந்தக் கோவிலை பெருமையாக நினைத்து வழிபட்ட மரபு இன்றும் பேசப்படுகின்றது. அந்த இடத்தில் தோன்றிய தான்தோன்றீஸ்வரர் ஆலயம் கிழக்கிலே பிரமாண்டமான கோவில் பல லட்சம் மக்கள் ஒன்றுகூடுகின்ற அந்தக் கோவிலில் இப்போது யாழ்ப்பாணத்தில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள இந்த அறக்கட்டளை சிவபூமி அறக்கட்டளை பல லட்சம் ரூபா செலவில் அந்தத் திருமந்திர அரண்மனையை அமைத்துள்ளார்கள். திருவாசக அரண்மனையை நாவற்குழியில் அமைத்து பேணிப் பாதுகாப்பது போன்று கிழக்கிலங்கையிலே இந்தப் பணி செய்து கிழக்கிலங்கை மக்களிடமே தான்தோன்றீஸ்வர ஆலயத்தின் நிர்வாகத்திடனே இந்தப் பணியை ஒப்படைக்கின்றார்கள்.

இங்கே கருங்கற் கோவிலிலே முகலிங்கம் இலங்கையிலே ஒரே ஒரு ஆலயத்திலே இணுவில் காரைக்கால் சிவன் கோவிலிலே முகலிங்கம் இருக்கின்றது. இப்போது கிழக்கிலங்கையில் மூலக்கருவறையிலே முகலிங்கம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

108 சிவலிங்கம் கருங்கல்லினால் அமைக்கப்பட்டிருக்கின்றது 3 ஆயிரம் திருமந்திரப் பாடல்களும் வாசலிலிலே அசையாத் தேராக சிற்பத்தேர் ஒன்று உருவாக்கப்பட்டு அந்தத் தேரிலே சிவபெருமானும் திருமூலராகிய திருமந்திரத்தைப் படைத்த திருமூலரும் சிற்பமாக எழுந்தருளச் செய்துள்ளார்கள்.

இது மட்டுமல்ல திருமந்திர அரண்மனைச் சுற்றாடல்கள் புனிதம் பெறக்கூடியதாக அங்கே பல்வேறு விடயங்கள் நிலைநாட்டப்பட்டு சம்பிரதாயபூர்வமாக கிழக்கிலங்கை மக்களிடம் கையளிக்கும் நிகழ்ச்சி எதிர்வரும் 24 அம் திகதி இடம்பெறவுள்ளது. கிழக்கிலங்கை மக்கள் மட்டுமல்ல அனைத்து சைவ மக்களும் வருகை தந்து உலக அதிசயமான 3 ஆயிரம்; பாடல்கள் கருங்கல்லில் பதிக்கப்பட்டுள்ள 1330 திருக்குறள் இந்தியாவில் கருங்கல்லில் பதிக்கப்பட்டுள்ளது திருவாசகம் யாழ்ப்பாணத்தில் 650 பதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் உலகத்திலேயே 3 ஆயிரம் தமிழ்ப்பாடல்களை கருங்கல்லில் பதிப்பித்த பெருமை சிவபூமி அறக்கட்டளையைச் சாரும் இதைத் தாங்குகின்ற பெருமை கிழக்கிலங்கை மக்களைச் சாரும் அற்புதமான இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.



# இலங்கை அரசியலில் மஹிந்தவின் 3 வது சுற்று ஆரம்பம்?

மஹிந்த ராஜபக்ஸ இன்றளவும் இலங்கையர்களால் மறக்க முடியாத ஒரு நாமம் , இலங்கையையை ஆண்ட துட்டகெமுனு அரசருக்கு நிகராக அல்லது அவரின் அடுத்த பிறப்பாக தென்னிலங்கையால் மகுடம் சூட்டி அழகு பார்க்கப்பட்ட வரலாற்றை கொண்ட ஒரு மனிதன் , அதே நாடும் , மக்களும் சூனியம் ஆக்கப்பட்ட வரலாற்றையும் தான் சுமக்க நேரிடும் என்று கனவில் கூட நினைத்து இருக்க மாட்டார்.

சந்திரிகா பண்டாரநாயக்க தன்னை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க வில்லை என்றால் தென்னிலங்கையை சார்ந்த தனது ஆதரவாளர்களோடு வந்து ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடுவேன் என தனது ஜனாதிபதி பதவிக்கு பிள்ளையார் சுழியிட்ட மஹிந்த அதே தென்னிலங்கை ஆர்ப்பாட்டகாரர்களால் பிரதமர் மாளிகை மற்றும் ஜனாதிபதி மாளிகை முற்றுகை இடப்பட்டு தாம் துரத்தி அனுப்பப்படுவேன் என்று கனவிலும் நினைத்து பார்த்திருக்கமாட்டார் .

யுத்த வெற்றியின் பின்னர் முழு இலங்கையும் தன்னுடைய சொத்தாக்கிய மஹிந்த தான் என்ன சொன்னாலும் நாடும் , மக்களும் ,சர்வதேசமும் நம்பிவிடுவார்கள் என்கிற ஒரு பிழையான மூலோபாயத்தை பின்பற்றியதுத்தான் அவரின் சரிவுக்கு மிகப்பெரிய காரணியாக வந்தது .

இதுவரை சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் விசாரணைகளை தனது நாட்டின் அரசியலை பயன்படுத்தி தப்பித்து வருகிற விடயமெல்லாம் வெறுமனே சாதாரண விடயமாக எடுத்துக்கொள்ள கூடாது .அதை எல்லாம் கடந்து மஹிந்த என்னும் ஹில்டலருக்கு உள்ளேயும் ஒரு ஜே.ஆர் ஜெயவர்த்தன இருக்கத்தான் செய்கிறார் .

இரண்டு முறை ஜனாதிபதியாக இருந்த பின்னர் , தனது சகோதரரை ஜனாதிபதியாக்கி அழகு பார்த்து , அதே நேரம் அரசாங்கத்தை தனது கட்டுக்கோப்புக்குள் வைத்துக்கொள்ள தன்னையே பிரதமராக்கி அழகு பார்த்து கொண்டவர் . எந்த ஒரு சூழ்நிலையிலும் தன்னையோ தன்னை சார்ந்தவர்களையோ இலங்கையின் சட்ட திட்டங்கள் எதுவும் செய்து விட கூடாது என்பதில் மிக கவனமாக இருந்தார் .

பாராளுமன்றம் , அமைச்சுக்கள் , அரச திணைக்களங்கள் , அரச உயரிய பதிவுகள் என எல்லாவற்றிலும் தனது குடும்பம் , தனது உறவினர்கள் , தனது ஊரை சேர்ந்தவர்கள் என மிக பெரிய சாம்பராஜ்யத்தை மஹிந்த கட்டமைத்தார் . சர்வதேச நாளிதழ்கள் கூட அந்த நேரத்தில் இலங்கையை சனநாயக போர்வையில் ஒரு சர்வாதிகார நாடு என விமர்சித்து இருந்தது .சொல்ல போனால் சனநாயகத்தின் முக்கிய விடயமான ஊடகங்கள் கூட மஹிந்த துதி பாடி கொண்டிருந்தது என்பது நாம் எல்லோரும் அறிந்த ஒரு விடயமாகும் .

அப்படிப்பட்ட ஒரு அரசாங்கத்தை கட்டமைத்த மஹிந்த அதே நாட்டு மக்களால் துரத்தி அடிக்கப்பட்டு ஓடி தலைமறைவு ஆகவேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலைக்கு தான் ஆளாக்கப்படுவேன் என கனவிலும் நினைத்து இருக்க வாய்ப்பில்லை , தான் மட்டுமல்லாமல் பல ஆண்டுகளாக கட்டியமைக்கப்பட்ட சாம்ராஜ்யம் தவிடு பொடியாகியுள்ள சூழ்நிலையில் தனது மூன்றாவது அத்தியாயத்தை மீண்டும் ஆரம்பித்து உள்ளார் .



அருண் செல்வராஜ்

கிட்டத்தட்ட ஒரு வருட கால காத்திருப்புக்கு பின் பொது மேடை ஒன்றில் தள்ளாத உடல் மொழியுடன் மீண்டும் இனவாத சாயத்தை மக்களுக்கு லேசாக தெளித்து உள்ளார் , இனவாதம் என்பது மஹிந்தவிற்கு கையில் வந்த கலை , அவர் எது சொன்னாலும் நம்பிவிடும் அளவுக்கு இன்னும் மஹிந்த வெறியர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் , ஆனாலும் மக்கள் மத்தியில் எது சம்பந்தமாக கருத்துக்களை பேசுவது என்பதில் இன்னும் பல தேடல்கள் மஹிந்தவுக்கு இருக்கத்தான் செய்கிறது .

வெல்லச பிரதேச கூட்டம் ஒன்றில் கடந்த வரம் பேசும் போது,மக்கள் இன்னும் என்னுடன் இருக்கிறர்கள் , என்னை பற்றியும் எனது கட்சி பற்றியும் பல வதந்திகள் எதிர்கட்சிகளால் கட்டவிழ்த்து படுகிறது , இனியும் அவற்றை பொறுத்துக்கொள்ள முடியாது , ஆகவே தீவிர பிரச்சாரத்தை முன்னெடுக்கலாம் என்று எண்ணியுள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார் .

ஒரு நாடு அதள பாதாளத்துக்கு தள்ளப்பட்டு , இன்னும் மீண்டுவர போராடிக் கொண்டு இருக்கின்ற தருணத்தில் கூட ,இதற்கு தான் காரணம் என்பதை ஒரு பக்கம் வைத்து விட்டு மக்கள் முன் தோன்றி அவர்களிடம் வீர வசனங்கள் பேச நிச்சயமாக ஒரு தைரியம் வேண்டும் .

ஆனாலும் பெருவாரியான மக்கள் இன்னும் அந்த நிலமையில் இருந்து வெளிவர முடியாமல் இருக்கின்ற சூழ் நிலையில் மஹிந்தவுக்கு இது பாரிய பின்னடைவே , ஒருவேளை IMF நிதியுதவி இலங்கைக்கு முழுமையாக

கிடைத்துவிட்டால் அது மஹிந்தவுக்கு பெரிய நிம்மதியை கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை .

மக்களில் அன்றாட அத்தியாவசிய தேவைகளில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்படும் , மறுபடியும் இனவாத கருத்துக்கள் , அடக்குமுறைகள் என்பன கட்டவிழ்த்து விடப்பட்டால் , மஹிந்தவின் வாக்கு வங்கி நிரம்பி வழிய வாய்ப்புகள் உள்ளது , இதுவே மஹிந்தவின் மூன்றாவது அத்தியாயத்தின் பாரிய இலக்கு ஆகும் .

ஆனால்தன்னைஏற்றுகொள்ளும் மக்கள் , அதே வகையில் தனது சகாக்களையும் ஏற்றுகொள்ளுவார்களா ? என்பதில் மஹிந்த என்ன நிலைப்பாட்டில் உள்ளார் என்பதிலேயே அவரின் வெற்றி தங்கியுள்ளது. இனியும் ஆற்றில் இருந்து நாகப்பாம்பு வந்து ராஜ குமாரர் கதை சொல்லுமா ? அல்லது லீ குங் எவ் மற்றும் மகிதீர் மொஹமட் வருவார்களா என்பதை பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும் .

மஹிந்தவின் மூன்றாவது அத்தியாயத்தை அமெரிக்க மற்றும் இந்திய நாடுகள் நிச்சயமாக வரவேற்க சாத்தியமில்லை , முடிந்த அளவுக்கு ரணில் விக்கிரம சிங்கவுக்கு அழுத்தங்களை கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை , ஆனால் சீனா தன் வீடு பிள்ளையான மஹிந்தவை கட்டி இழுத்துவர முனைப்போடு இருக்கிறது .

மஹிந்தவின் மூன்றாவது ஆட்டம் தனக்கானது இல்லை, அது முழுக்க முழுக்க நாமலின் ஜனாதிபதி கனவின் ஆரம்பப்புள்ளியே !தனது மகனை எப்படியாவது ஜனாதிபதியாக்கி விட வேண்டும் என்கிற அப்பாவின் கனவே மஹிந்தவின் மூன்றாவது ஆட்டத்தின் நோக்கம் , கோட்டாபய ராஜபக்ச மற்றும் பெசில் ராஜபக்ச எந்த அளவுக்கு இவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுப்பார்கள் என்பதில் பாரிய சந்தேகம் உள்ளது . நாமல் மற்றும் பெசில் கோட்டா இடையேயான உறவுகளின் விரிசல்கள் பற்றி ஏற்கனவே நாம் அறிந்த விடயங்களே , ஆக தனக்கான அப்பாவின் ஆட்டத்தில் இவர்களை நாமல் இணைத்து கொள்ள சம்மதிப்பாரா என்பது பொறுத்து இருந்து பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

பாராளுமன்றில் இதுவரை தனது சகாக்களை பக்கபலமாக வைத்துள்ள மஹிந்த , மிகவும் பாதுகாப்பான ஆட்டத்தையே தொடங்கியுள்ளார் .ஆனால் எதிர்க்கட்சிகள் மஹிந்தவை வெறுமனே ஆரம்பம் என்று பார்க்குமாக இருந்தால் மீண்டும் வரலாற்று பிழையை செய்ய முனைவதற்கு சமம் . எனவே மஹிந்தவின் மூன்றாவது ஆட்டத்தில் நாமல் வெற்றிக்கனியை சுவைப்பாரா என்று பொறுத்திருந்து பார்ப்போம் .



**மஹிந்தவின் மூன்றாவது ஆட்டம் தனக்கானது இல்லை,**
**அது முழுக்க முழுக்க நாமலின் ஜனாதிபதி கனவின் ஆரம்பப்புள்ளியே!**
**தனது மகனை எப்படியாவது ஜனாதிபதியாக்கி விட வேண்டும் என்கிற**
**அப்பாவின் கனவே மஹிந்தவின் மூன்றாவது ஆட்டத்தின் நோக்கம் ,**
**கோட்டாபய ராஜபக்ச மற்றும் பெசில் ராஜபக்ச எந்த அளவுக்கு இவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுப்பார்கள் என்பதில் பாரிய சந்தேகம் உள்ளது . நாமல் மற்றும் பெசில் கோட்டா இடையேயான உறவுகளின் விரிசல்கள் பற்றி ஏற்கனவே நாம் அறிந்த விடயங்களே , ஆக தனக்கான அப்பாவின் ஆட்டத்தில் இவர்களை நாமல் இணைத்து கொள்ள சம்மதிப்பாரா என்பது பொறுத்து இருந்து பார்க்க வேண்டிய ஒன்றாகும்.**

# அழிந்து வரும் தமிழ் இன அடையாளம்



உலகின் மூத்த மொழி தமிழ். தமிழின் எழுத்துக்கள் முதலில் பதியப்பட்டது பனை ஓலையில் தான் என்று குறிப்பிடப்படுகின்றது. இம்மாதிரியான ஒரு சிறப்பு வாய்ந்த பனைமரத்தின் உயிராக திகழும் தமிழ் மொழி இன்று கொஞ்சம் கொஞ்சமாக பேரினவாதிகளால் அழிக்கப்பட்டு வருகின்றது. ராஜபக்ச அரசாங்கமும் சரி ரணில் அரசாங்கமும் சரி போரில் தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவம் தோற்கடித்த கையோடு வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள அனைத்து தமிழர் அடையாளங்களையும் அழிக்கும் முயற்சியில் தொடர்ந்து தீவிரம் காட்டி வருகிறது. தமிழர்களுக்கு சொந்தமான பண்பாட்டு மத அடையாளங்கள் எல்லாம் பௌத்த மதத்தை தழுவியவை என்று தமிழர்களின் அடையாளங்களை பேரினவாத கும்பல் அபகரித்து வருகின்றது.

இலங்கை இராணுவம் விடுதலைப் போராட்டத்துக்காக உண்ணாவிரதமிருந்து உயிர்த்தியாகம் செய்த திலீபன் நினைவிடம் பல ஆயிரம் போராளிகளின் நினைவிடங்கள் என அனைத்தையும் புல்டோசர் வைத்து இடித்து தள்ளிவிட்டது. கிளிநொச்சி ஆனையிறவில் உள்ள நினைவிடங்கள் அழிக்கப்பட்டன. வன்னிப் பகுதியில் முள்ளியவளையில் உள்ள மிகப்பெரிய நினைவிடம் அழிக்கப்பட்டது. வன்னி பகுதி தமிழர்கள் இந்த நினைவிடத்தை புனித இடமாக கருதி வழிபட்டு வந்தனர். அந்த வழியாகச் சென்றால் கூட வணங்கி விட்டுத்தான் செல்வார்களாம்.

முல்லைத்தீவு பிரதான பொதுச்சந்தை ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரம் ஆலயம் மாந்தைகிழக்கு பூவரங்குளம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பத்திரகாளி அம்மன் கோவில் கரைதுறைப்பற்று பிரதேச குமாரபுரம் கிராம அலுவலர் பிரிவில் குமாரபுரம் சிறீ சித்திரவேலாயுதம் முருகன் கோவில் வளாகம் கரைதுறைப்பற்று பிரதேச குமுழமுனை கிராம அலுவலர் பிரிவில் ஆஞ்சநேயர் கோவிலை அண்மித்த இடங்கள் மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கரும்புலியன் கிராமத்தைச் சேர்ந்த பாண்டிபுலியன் குளம் சிவன் கோவில் மாந்தை கிழக்கு பாலிநகர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வவுனிக்குளம் சிவபுரம் சிறீமலை கோவில் குமுழமுனை குறிஞ்சிக்குமரன் கோவிலடி உள்ளிட்ட பல இடங்கள் திருக்கேதீஸ்வரக்கோவில் முத்தரிப்புத்துறையின் அரிப்புக்கோட்டைப்பகுதி



உடுவில் பிரதேச செயலக பிரிவில் சுன்னாகம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்த சுன்னாகம் பொதுச்சந்தை மயிலிட்டி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் மயிலிட்டி போர்த்துக்கேயர் கோவிலடி வேலணை அல்லைப்பிட்டி கிராம அலுவலர் பிரிவில் அல்லிராணி கோட்டைப்பகுதி உள்ளிட்ட பல்வேறு தமிழர்களுக்கு சொந்தமான பகுதிகளை அரசாங்கம் வர்த்தமாணி அறிவித்தலில் வெளியிட்டு தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமானது என அறிவித்து வருகின்றது.



தமிழர் வாழ்ந்த அடையாளங்களே இருக்க கூடாது எண்று கங்கணம் கட்டி தான் பௌத்த மத தீவிரவாதிகளும் இராணுவத்தினரையும் முன்னிறுத்தி அரசாங்கம் காய்நகர்த்தி வருகின்றது. தாம் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் தமிழர் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் எந்தவொரு அரசியல்வாதியும் இதைப்பற்றி கவலைபடுவதே கிடையாது. தமிழர்களின் அடையாளங்கள் எதையும் அழியவிடாது தடுக்க வழி தெரியாதவர்கள் புதிதாக ஒரு கட்டிடம் எழுவதை தடுப்பதில் மட்டும் தான் அக்கறை காட்டி வருகின்றனர்.

ஒருவேளை இப்படியாக கூட இருக்கலாம் அழிவை தடுக்க முடியாது போனாலும் புதிய நிர்மாணங்களை தடுப்பதினால் சிங்கள அரசாங்கத்தை எதிர்த்து கேள்வி கேட்டவர்கள் என அடுத்த தேர்தலில் நெஞ்சை நிமிர்த்தி கொண்டு வாக்கு பிச்சை கேட்கலாம் என்ற எண்ணமோ தெரியவில்லை. அந்தவகையில் நம் நாட்டு அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றுவதில் கிள்ளாடிகள். மக்களுக்காக மக்களுக்காக என்று பொது இடங்களில் மார்தட்டி கொள்வார்களே தவிர அவர்கள் மக்களுக்காக செய்த சேவைகளை தான் விரல் விட்டு எண்ணினால் கூட இரண்டு மூன்று சேவைகள் தான் உருப்படி என்று கூறலாம். குருந்தூர் மலை விவகாரத்தில் கூட சிங்கள பௌத்த மத தீவிரவாதிகளிடமிருந்து ஒரு தீர்க்கமான முடிவு எட்டப்படவில்லையே. எப்படியோ தமிழன் நாசமாக போவதில் யாராவது அரசியல் வியாதி தமிழன் நலன் அடைகிறார்களே எண்று நிம்மதி அடைவதை தவிர வாக்களித்த மக்களால் என்ன செய்து விட முடியும்.

இருந்தும் இந்த நிலைமையை இளைஞர்கள் நினைத்தால் மாற்லாம். ஆயுதம் ஏந்தி போராடுவதல்ல தன் அறிவை ஆயுதமாக ஏந்தி சிங்கள தீவிரவாதிகளோடு போராட வேண்டும். உலகம் முழுக்க கணிசமான அளவுக்கு வியாப்பித்துள்ள நம் தமிழ் சமுதாயம் குறித்து சுய வேலைவாய்ப்பு என்ற சிந்தனையே இல்லாமல் மற்றோருக்கு கீழ் அடிமை வேலை செய்யக்கூடிய சமூகமாகவே இருப்போம் என்று கங்கணம் கட்டிக்கொண்டுள்ளது பேரினவாத சமுதாயம். அதனால் தான் நம்மை அடிமைகளாக்கி நம் இனத்து அடையாளங்களை கடந்த பல வருடங்களாக சூறையாடி வருகின்றனர். இனியும் நாம் இதற்கு இடமளிக்க கூடாது. இனியாவது விழித்து கொள்ள வேண்டும். நம் பாட்டன் முப்பாட்டன் நமக்கும் நம் எதிர்கால சந்ததிக்காக என்று விட்டு சென்ற நமது பூர்விக சொத்துக்களான இன அடையாளங்களை பாதுகாக்க வேண்டும். காணி அபகரிப்பின் மறுவடிவமாக தான் இன்று இலங்கையின் தொல்;பொருள் திணைக்களம் தமிழ் மக்களின் அடையாளங்களை அழித்து வருகின்றது.

கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக திருகோணமலை கின்னியா வெந்நீரூற்று சுற்றுலாதளத்தை கூட தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்தி கொண்டுள்ளது. தமிழர்களின் தொன்று தொட்டு வாழும் வடக்கு கிழக்கு பகுதிகளில் நுழைந்து சிங்கள மக்களை குடியேற்றி இதன் மூலம் ஒரு கட்டமைக்கப்பட்ட இன ஒடுக்கு முறை இன அழிப்பினை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதே உண்மை.

தமிழ் இன அடையாளங்கள் அழிக்கப்பட்டு அவ்விடங்களில் பௌத்த மத சின்னங்கள் நிறுவப்படுகின்றன. இதன்மூலம் பௌத்த ஆதிக்கத்திலுள்ளவர்கள் இலங்கையில் தமிழர்களின் அடையாளங்களை இல்லாமல் செய்கின்றனர். இவை நிறுத்தப்படல் வேண்டும். இலங்கை தமிர்களுக்கு சொந்தமானது அதிலும் வடக்கு கிழக்கு தமிழர்களின் பூர்வீகம். சட்டரீதியாக அணுகி இவ்வாறான தமிழர் அடையாளங்கள் மீதான பௌத்த மத திணிப்பை இல்லாதொழிக்க நாம் அனைவரும் நிச்சயம் ஓர் கரம் கோர்த்து ஒன்றிணைய வேண்டும். ○

> **தமிழர் வாழ்ந்த அடையாளங்களே இருக்க கூடாது என்று கங்கணம் கட்டி தான் பௌத்த மத தீவிரவாதிகளும் இராணுவத்தினரையும் முன்னிறுத்தி அரசாங்கம் காய்நகர்த்தி வருகின்றது. தாம் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் தமிழர் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் எந்தவொரு அரசியல்வாதியும் இதைப்பற்றி கவலைபடுவதே கிடையாது. தமிழர்களின் அடையாளங்கள் எதையும் அழியவிடாது தடுக்க வழி தெரியாதவர்கள் புதிதாக ஒரு கட்டிடம் எழுவதை தடுப்பதில் மட்டும் தான் அக்கறை காட்டி வருகின்றனர்.**




# யாழ்., சென் ஜோன்ஸ் கல்லூரி 200 வது ஆண்டில் நுழைகிறது!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

**பாரெங்கும்** புகழ் பரப்பி, பல கிளை விட்டு விருட்சமாய் வியாபித்திருக்கும் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி 200ஆவது ஆண்டினை தற்போது பூர்த்தி செய்கிறது.

இலங்கையின் கல்வி மறுமலர்ச்சியில் ஆங்கில மிஷனரிமார்களின் வருகை அக்காலத்தில் முக்கிய பங்கு வகித்தது. குறிப்பாக ஒழுக்க விழுமியங்கள், தொழில் நுட்ப அறிவு, ஆங்கிலக் கல்வி என்பன மேலோங்கிக் காணப்பட்டன.

இன்று யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி உலகெங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் வண்ணமாய், அக்கல்லூரி மாணவர்களின் திறமை போற்றப்படுகிறது. இக்கல்லூரியின் ஆரம்ப வரலாற்றை சற்று பின்நோக்கிப் பார்த்தால், இப்பாடசாலையின் பரிணாம வளர்ச்சியை அறியலாம்.

இலண்டனில் இருந்து ஜோசப் நைட் அடிகளும் அவரது குழாமும் 1818 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நல்லூரில் தங்கள் கல்விப பணிகளைத் தொடங்கினர். ஆங்கில மிஷனரிமார்களுள் ஈழத்து யாழ்ப்பாணத்தில் முதல் பாதம் பதித்தவர் வண.ஜோசப் நைட் அடிகளார் ஆவார்.

அன்று விதைத்த விதையே இன்றைய சென் ஜோன்ஸ் கல்லூரியின் 200 வது வருடம் என்ற நீண்ட நெடிய உயர்ந்த வளர்ச்சிக்கு காரணமாய் அமைந்தது.

## ஏழு மாணவருடன் முதல் பள்ளி:

1823 இல் தன் வீட்டிலேயே ஏழு மாணவர்களுடன் சிறந்ததொரு பள்ளியை அமைத்து அம் மாணவர்களுக்கான வாழ்வாங்கு வாழ கல்வியை ஆரம்பித்தார். 1824இல் பதின்மூன்று மாணவர்களையும் 1825இல் முப்பது மாணவர்களையும் கொண்டு இப்பள்ளி வளர்ச்சி பெற்றது.

இதன்பின் 1824 இல் ஜோசப் நைற் அவர்களிடமிருந்து வண வில்லியம் அட்லி (Rev. William Adley) பொறுப்பேற்றார். இவர் ஒரு திறமையுள்ள ஆங்கில அறிவும் தமிழ் அறிவும் நிறைந்தவராகவும் காணப்பட்டார். 1839 முதல் 1841 வரை D.W.Tailor என்பவர் வில்லியம் அட்லி அவர்களைத் தொடர்ந்து பொறுப்பேற்றார்.

1841 காலப்பகுதியில் பெண்கள் தங்கியிருந்து கற்பதற்காக தனியார் விடுதியாக நல்லூர் ஆங்கில செமினரி மாற்றம் நடந்தது. அவ்வாண்டிலேயே நல்லூர் ஆங்கில செமினரி சுண்டிக்குளிக்கு இடமாற்றம் பெற்று சுண்டிக்குளி செமினரி எனவும் பெயர் மாற்றம் பெற்றது.

## புளியமர நிழலில் வகுப்புகள்:

ஆரம்ப நிலையில் வகுப்பறை வசதியின்மையால் ஓங்கி வளர்ந்த புளியமர நிழலிலேயே வகுப்புகள் நடத்தப்பட்டன. அக்காலத்தில் Rev.J.T.Johnstone அதிபராகப் பணியேற்றார். அவருடன் இணைந்து John Hensman அவர்கள் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து Rev.Robert William அவர்கள் தலைமை ஆசிரியராகப் பொறுட்பேற்றார். ஆயினும் 1866 இல் கொடிய நோய் காரணமாக அவர் இயற்கை எய்தினார்.

அதன் பின் J.Evarts 1867 1878 வரை தலைமை ஆசிரியர் பணியைத் தொடர்ந்தார்.

## ராபர்ட் வில்லியம்ஸ் நினைவு மண்டபம்:

1866 ஆம் ஆண்டில் நாட்டைப் பேரழிவிற்குள்ளான காலரா தொற்றுநோய் காரணமாக, ராபர்ட் வில்லியம்ஸ் தனது 8 வயது மகனை இழந்தார். அவரும் காலரா நோயால் பாதிக்கப்பட்டு தீவிர நோய்வாய்ப்பட்டு அக்டோபர் 10, 1866 இல் காலமானார். திரு. ராபர்ட் வில்லியம்ஸ் நோயுற்ற படுக்கையில் மானிப்பாய் கிரீன் மருத்துவமனையில் பராமரிக்கப்பட்டார்.

இலங்கைத் தீவின் இரண்டாவது பழமையான செய்தித்தாளான மார்னிங் ஸ்டார் மற்றும் முதல் தமிழ் மொழி செய்தித்தாள் உதயதாரகை அவரது மரணச் செய்தியை அப்போது வெளியிட்டன. அவரது அகால மறைவைக் குறிப்பிடுகையில், 'ராபர்ட் வில்லியம்ஸ்' தனது பூமிக்குரிய கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்றி கடவுளின் அருளால் யாழ் மக்கள் மனதில் நுழைந்தார். அவரது மரணம் சுண்டிக்குளி செமினரிக்கு ஒரு பெரிய இழப்பாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இவர் நினைவாகவே தற்போது புதிய மண்டபம் 200வது ஆண்டில் திறக்கப்பட உள்ளது.

## சிறு விதை பெரு விருட்சமாக :

இத்தகைய கல்விப் பணியாளர்களின் தன்நலமற்ற சேவையாலும் அயராத உழைப்பாலும் விதைக்கப்பட்ட சிறு விதை இன்று பெரு விருட்சமாக ஓங்கி வளர்ந்து பல்லாயிரம் பேருக்கு நிழல் கொடுக்கின்ற ஒரு ஸ்தாபனமாக மிளிர்கின்றது.

இங்கிலாந்து திருச்சபையின் இறுதி மிசனரியாளரும், கல்லூரியின் பதினாறாவது அதிபருமான அருட்திரு ஹென்றி பிற்றோ அடிகளார் கல்லூரியின் அதிபராக இருந்தபோது கல்லூரி மேலும் ஓங்கி வளர்ந்தது.

அருட்திரு ஹென்றி பிற்றோவின் (19201940) பின்னர், முதலாவது தேசிய அதிபர் என்னும் அந்தஸ்தினைப் பெற்ற அருட்திரு ஒ.கூ.அருளானந்தம் (19401957), திரு.P.T.Mathai (19571959), திரு.A.W. ராஜசேகரம் (19591966) திரு.க.பூரணம் பிள்ளை (19671976), திரு.சி.இ.ஆனந்தராஜன் (19761985) திரு.குணசீலன் (19851987), திரு. தனபாலன் (19902006), திரு. ஞானப்பொன்ராஜா (20062017), தற்போது திரு. துஷிதரன் ஆகியோர் அதிபர்களாக பணியாற்றி உள்ளனர்.

## மகாத்மா காந்தி வருகை :

இக்கல்லூரியிலேயே 1927 நவம்பர் 29இல் இந்திய தேசபிதா மகாத்மா காந்தி கல்லூரிக்கு வருகை தந்து, வில்லியம் மண்டபத்தில் உரையாற்றிய வரலாறும் உண்டு.

ஆயினும் 1945ல் நடைமுறைக்கு வந்த அன்றைய இலவசக் கல்வித் திட்டத்துடன் இணைந்து செயற்படாது தனித்துவமாக வெளியே இருக்க தீர்மானித்தது. மீண்டும் பல்வேறு நோக்கங்களுக்காக 1951ல் இலவசகல்வித் திட்டத்தில் இக் கல்லூரி இணைந்து கொண்டது.

## கல்லூரி எதிர்கொண்ட சவால்கள் :

1960ல் அரசு பாடசாலைகளைக் கையகப்படுத்தி பொதுமைப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது. அதன் பிரகாரம் இக்கல்லூரியையும் அரசாங்கப் பாடசாலையாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது. கல்லூரி தன் தனித்துவத்தை இழக்க விரும்புவதைத் தவிர்த்து, தனித்து இயங்க முற்பட்டது.

பல்வேறுபட்ட தியாகங்கள், சோதனைகள், வேதனைகள் போராட்டங்கள், மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள். நலன் விரும்பிகள் என பல்வேறு பட்டவர்களின் மேலான ஒத்துழைப்பினாலும், பக்கபலத்தினாலும் சென்.ஜோன்ஸ் கல்லூரியைத் தனியார் பாடசாலையாக இயங்குவதற்கு தீரமானிக்கப்பட்டது.

கல்லூரி நிர்வாகத்தை ஆளுகை செய்வதற்கு ஆளுகைக்குழுவும் ஆலோசனை வழங்குவதற்கு ஆலோசனை சபையும் உருவாக்கப்பட்டது.

அரச உதவிகள் தடைப்பட்டமையினால் கல்லூரி நிர்வாகம் பாரிய நிதிப்பற்றாக் குறையை எதிர்கொண்டது. ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஊதியம் வழங்கமுடியாது திண்டாடியது. கல்லூரியிலிருந்து வெளியேறினர் சிலர் பாதிவேதனத்தில் பணிபுரிந்தனர் பலர் இலவசமாகவும் பணியாற்றினர்.

பல்வேறு அளப்பெரும் ஆளுமைகளால் வளர்க்கப்பட்ட 'பரியோவான் கழுகு' (Johnian Eagle) தன் கூரிய பார்வையுடன் நேரிய இலக்கை நோக்கி உயரப் பறந்து வருகிறது.






# வெந்துதணிந்தது காடு

## ஓர் பார்வை...



**ந.வினோதன்**

'வெந்து தணிந்தது காடு' திரைப்படமானது போர் சூழலில் நிகழ்ந்தவைகளில் ஒரு குடும்பத்தில் (குறிப்பிட்ட நிலப்பரப்பு) பங்கருக்குள் வாழ்ந்த வாழ்க்கையை I phone இல் படமாக ஆக்கி இருக்கிறார்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து தங்களது உயிரை பொசுப்பரசு குண்டுகளில் இருந்து காப்பாற்றிக் கொள்ள ஒருக் கூட்டுகுடும்பம் பங்கருக்குள் (மரக் குற்றிகள் , மண் மூட்டைகளை கொண்டு நிலத்துக்கு கீழ் அமைக்கப்படும் பாதுகாப்பு அரண்) இருந்து தப்பிக்க எடுத்த முயற்சிகளை ஒரு வயது முதிர்ந்த தாயாரை பிரதான பாத்திரமாக வைத்து நிகழும் நிகழ்வை கதைக்களமாகக் கொண்டு படாமாக்கி இருக்கிறார் ஈழத்து இயக்குனர் மதிசுதா .

ஈழப்போராட்டத்தில் வாழ்ந்தவர்களுக்கு இந்த திரைப்படம் தங்களின் வாழ்வின் பிரதியாகவும் அல்லாதோருக்கு இதுவரையிலும் கேட்ட செவி வழி கதைகளின் காணொளியாகவும் இந்த திரைப்படம் அமைந்துள்ளது.

படத்தில் ஈழத்து நடிக்கர்களை மட்டுமே வைத்து இயக்கியுள்ள இயக்குனர் ஈழப்போரில் வாழ்ந்தவர்களையும் நடிகர்களாக தெரிவு செய்திருந்தமை படத்துக்கு மேலும் பக்கபலமாக அமைந்தது.

முதியவராக வரும் பார்வதி அம்மாவின் நடிப்பு அபாரம். உடன் நடித்த அனைத்து நடிகர்களும் ஏற்றப் பாத்திரத்தில் இயல்பு நிலை மாறாது தங்களது நடிப்பை வெளிப்படுத்தி இருந்தார்கள்.




போராளிகளுக்குறிய செக்சேர்ட், கழுத்தில் குப்பி, தகடு, கெசியோ மணிக் கூடு மேலும் அவர்களின் நிலப்பற்று அவர்களின் வாழ்வியலையும் எடுத்துக்காட்டுவதாக இருந்தது.

காட்சி புலன்களால் வரும் கிடுகு வேலி, பனையோலை , இலாம்பும், முற்றத்து மணல் பழஞ்சோறும், சைக்கிள், லேன்மாஸ்டர், பங்கருக்குள் வெளிச்சம் தரும் பெட்டரி, அத்தனையும் வன்னி மண்ணின் வாழ்வியலை சான்று பகிர்வதாக இருந்தது.

கண்ணீர், காதல், ஏக்கம், ஏமாற்றம், நகைச்சுவை அத்தனையும் படத்தில் இருந்தது. சில காட்சிகள் அழுது கண்ணீர் வந்தது சில காட்சிகள் சிரித்தும் கண்ணீரை வரவழைத்தது.

பின்னனி இசை அபாரம் படத்தில் ஒரே ஒரு பாடல்தான் அதையும் பார்வதி அம்மா பாடி இருந்தார்.

இறுதிக்காட்சியில் குப்பியை வாயில் வைத்து நசிக்கும் காட்சியும் சரி 'வெற்றியோ தோல்வியோ இந்த யுத்தம் இதோடு முடித்து விடுங்கள்' என்று அந்த தாய் சொல்லும் காட்சி சிந்திக்க தூண்டியது.

இந்த படத்தின் வெற்றி என்னவென்றால் யாரின் மீதும் குற்றம் சுமத்தாது நடந்ததை அப்பட்டமாக அப்படியே காட்டி இருப்பது. பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றிருந்தாலும் பொருளாதார ரீதியில் வெற்றி அடைய வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு அப்போதுதான் ஈழத்து சினிமா அடுத்த படிக்கு நகரும்.

அனைவரும் குடும்பமாக பார்த்து கொண்டாடவேண்டிய திரைப்படம் . அடுத்த தலைமுறைக்கு நமது கதையினை சொல்லவேண்டிய பொறுப்புள்ளது. அதை செய்வார் என்ற நம்பிக்கையை இந்த திரைப்படம் ஏற்படுத்தி இருக்கிறது.

படம் முடிந்த பின்னரும் திரையரங்கை விட்டு வெளியேறாது அமர்ந்து இருந்து தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டு கண்ணீரோடு திரையரங்கை விட்டு வெளியே வந்தனர். இது எங்களின் வலி சுமந்த கதை என்பதற்கு இதுவே சான்று.

திரைக்கதை, வசனம், நடிப்பு , இயக்கம் அத்தனையிலும் வெற்றி கண்டுள்ளார்.

மொத்தத்தில் ஈழத்து 'வெந்து தணிந்தது காடு' எனும் திரைப்படம் உள்ளுக்குள் அதே உஷ்ணத்தை இன்னும் அப்படியே வைத்திருக்கிறது.